பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரு. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மலர் 4 | ஈரோடு, விபவ ஆண்டு புரட்டாசி மீ 15 உ. (30—9—28) ஞாயிற்றுக்கிழமை. | இதழ் 23

இப்பொழுதுதான் வந்தது!! புதியசரக்குகள்!!

## உறுதியான கிரண்டி கறுப்புநூல் பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சரசமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது:—
2 இன்சு அகலம் ரூ. 0—7—0 ஓர் அடி.
3 ,, ,, ,, 0—10—6 ,,
4 ,, ,, ,, 0—14—0 ,,

1/4 இன்சு கனம் உள்ளது:—
4 இன்சு அகலம் ரூ. 1—2—6 ஓர் அடி.
5 ,, ,, ,, 1—7—6 ,,
6 ,, ,, ,, 1—12—0 ,,

## 26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள் அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும்:—

6 அடி நீளம் 33 இன்சு அகலம் ரூ. 2—4—0 ஒரு தகடு.
7 ,, ,, ,, 2—8—0 ,,
8 ,, ,, ,, 3—0—0 ,,
9 ,, ,, ,, 3—6—0 ,,
10 ,, ,, ,, 3—12—0 ,,

MASSEY & Co. LTD.
ENGINEERS

மாஸி அண்டு கம்பேனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

பி. கிருஷ்ணா ஏஜன்ஸி, தபால் பெட்டி 119 மதராஸ்.

## அனிதா காஸ்பார்ட் வைத்தியசாலை.

ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா
வோகளி ஆரியா
எம் ஏ, பி டி, எம் டி,
சர்ஜன் அண்ட் பிஸிஷன்

கர்ப்ப சம்பந்தமான சகல வியாதிகளையும் நிவர்த்திப்பதிலும், மருத்துவம் செய்வதிலும் கை தேர்ந்தவர்.

குழந்தைகளின் வியாதிகளுக்கு சிறந்த வைத்தியம் செய்யப்படும்.

டாக்டரை பார்க்கும் நேரம்;—
காலை 8 முதல் 11 மணி வரை
மாலை 5 முதல் 6 மணி வரை
டெலிபோன் நெ. 3789.

158, புரசைவாக்கம் ஹைரோட்,
வேப்பேரி, சென்னை.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த வேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உயர்ந்தது. கையில் கட்டிக்கொ... போல் இருக்கும். ... ரோல்டுகோல்டு ... இனமாய்ச்சேர்த் ... உத்திரவாதம். ரூ ...
CANADIAN WATCH ...
Geor... Tow...

மூன் ...
மோட் ...
(19...
மோட் ... பிரிக்கவும் பூட்டவும் ... தபின் ... போம். ... எழுதவும்.
மதரா ... மோட்டார் ...
... மதராஸ்.

‘திராவிடன்’

திணப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,,18—0—0 |

மானேஜர்,
“திராவிடன்” மவுண்ட்ரோட்,
மதராஸ்.

அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார்செய்த அருணாக்கொடி கிலுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு கடகம், மயிர் மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவிச் சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம், வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

S. K. மாணிக்கம் செட்டி,
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்பேட்டை, சேலம்,

அன்பார்ந்த நண்பர்களே!

மனதிலுள்ள விஷயங்களை இங்கிலீஷில் வாக்கிய ரூபமாய் வெளிப்படுத்திப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சாதகமாய் உபயோகப்படக் கூடியது

“ட்ரான்ஸ்லேஷன் கைட்”

என்னும் புஸ்தகம் ஒன்றுதான். ஏனெனில், இங்கிலீஷ் இலக்கண விதிகளையும் மொழிபெயர்ப்பின் தத்துவங்களையும் விஸ்தாரமாய் எடுத்துக்காட்டி உதாரணங்கள் சகிதம் யாவருக்கும் அனுபோகத்தில் பயன்படும்படிக்கான முறையில் இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. விலை அணா 10. வி. பி. சார்ஜ் அணா 4.

நீலகண்டம் புக் டிப்போ,
கயத்தார் P. O.
(திருநெல்வேலி ஜில்லா.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. சாதர்மீரா சாயபு,
ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

‘ஆனந்தகுணபோதினி”

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற ஒப்புயர்வில்லாத தன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜாவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆனந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் “அமிர்த குணபோதினி”யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி, இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
இதை—சாதனை செய்.

சுவாச காச ரோக நிவாரணி

என்னும் ஆஸ்த்மா பௌடர் சிகிட்சை.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்!

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலுகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது. உத்திரவாதமுள்ளது.

கிரமமாக சாப்பிட்டுவந்தால் துரித ஸ்கலிதம், சொற்பன ஸ்கலிதம் முதலியன தீரும். நீர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பன சக்தி உண்டாகும்.

120 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2—8—0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆநந்தநிலையம், திருச்செங்கோடு. S I.

# பிராமணனைக் குற்றம் சொல்லுவதேன்.

## பிராமணத் தன்மையிலிருந்து நீங்கினதினலன்று.

—0—

(கைவல்யசாமியார் எழுதுவது.)

(முன் தொடர்ச்சி)

அதற்கு காரணம் (1) கடவுள் (2) சாஸ்திரம் (3) அதை நம்பிக்கொண்டிருந்த முட்டாள்தனம். "கடவுளால் சொல்லப்பட்ட தேவ பாஷையைச் சூத்திரன் படிக்கப்படாது. சூத்திரனுக்குச் சொல்லப்படாது. சூத்திரரான நீங்கள்முட்டாள்கள். உங்களுக்கு பார்ப்பான்சொல்லுவதைக்கேட்க அதிகாரமே ஒழிய படிக்க அதிகாரமில்லை என்று சாஸ்திரம் சொல்லுகிறது" என்று அன்று எப்படிச் சொன்னார்களோ அப்படியே இன்றும்சொல்லுகிறார்கள்.

எல்லாம் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டிருக்கிறதென்பதை நினைக்கையில் வடமொழி கடவுளால் உண்டாக்கப்பட்டதென்று சொல்லுவதில் அதிசயமில்லை. கடவுள் பாப்பானை முகத்திலிருந்துண்டாக்கி வடமொழியை கடவுள் வாயிலிருந்துசொல்லி 'வேறுஒருவருக்குஞ்சொல்லிவைக்காதீர்கள்' என்று பார்ப்பானிடம் சொல்லியிருப்பாரா என்பதில் தான் சில சந்தேகங்களுண்டாகின்றன. அந்தக்கடவுள் மற்றவர்களை காலிலிருந்துண்டாக்கி மற்ற பாஷைகளை சூத்திலிருந்து செய்து 'வாயிலிருந்து வந்த பாஷையை காலிலிருந்து வந்தவனுக்குச் சொல்லாதே; சூத்திலிருந்து வந்த பாஷையைப் படித்துப் பேசி பக்குவம் போல் என்பேர் சொல்லி எல்லாரையும் ஏமாற்றி பாடுபடாமல் பிழைத்துக்கொள்' என்று முகத்திலிருந்து வந்த பார்ப்பானுக்குக் கடவுள் சொல்லியிருப்பாரா என்பதை நினைக்கையில் தான் ஆச்சரியமாக விருக்கிறது. இதைப்பற்றி அழுத்தி விளக்கி எழுதினுல் தூஷணை புரிகிறவர்களும் நாஸ்திகருமாய் விடுவோம். இப்படி பாப்பார்கள் சொல்லுவதில் கவலையில்லை. இவர்கள் கூடச் சேர்ந்து நம்மவர்களும் சொல்லுவதில்தான் கவலையுண்டு 'முட்டாள்களானசூத்திரர்களென்று நாங்கள்உங்களைச் சொல்லுகிறோம். உங்களில் பல மிராஸ்தார்களும் பண்டிதர்களும் கேட்டுக் கொண்டுதானே இருக்கிருர்கள். அது வரையிலும் நீங்கள் முட்டாள்கள் தானே' என்று பார்ப்பான் சொல்லுகையிலும் கவலையாகத்தானிருக்கிறது. இந்தப்பணக்காரர்களுக்கும் சூத்திரன் என்பதின் அர்த்தம் தெரியாது. சிலருக்குத் தெரிந்திருந்தாலும் உணர்ச்சியில்லை' உணர்ச்சியிருந்தாலும் வக்கீல் தயவும், அதிகாரி தயவும், காங்கிரஸ் உபசரணைக்கமிட்டி உத்தியோகமும் 'பிள்ளைவாளே, முதலியார்வாளே' என்று பார்ப்பான் கூப்பிடும் மரியாதையும 'நானும் நீயும் ஒன்று. நீ சற்சூத்திரன் உன் வீட்டில் எதுவும் சாப்பிடுவேன். எனக்கு வித்தியாசமில்லை' என்று காரியத்திற்கு ஏமாற்றிக் காப்பி குடிக்கும் நட்பும் உணர்ச்சியைக் கெடுத்து விடுகிறது. இவர்களைப் போன்று இவர்கள் பிள்ளைகளிருக்க மாட்டார்களென்று நினைக்கையில் கவலை நீங்கி விடுகிறது.

உலகத்திலில்லாத, உலகத்திற்கு ஒத்துவராத, உலகத்திற்கு ஞாயமென்று படாத, உலகத்திற்கே அவமானமென்று படக்கூடிய இக் கொடுமையைக்கடவுள் சொல்லியிருப்பாரா? சாதாரண மனிதனுக்குக் கூட ஞாயத்தீர்ப்பென்று படாத இக்கொடுமையான தீர்ப்பைக்கடவுள் பேரில் போடுகிறவர்களா ஆஸ்திகர்கள். இப்பாவிகள் ரிஷித்தன்மையைப் பற்றித் தெரிந்திருந்தால் இந்த விதி ரிஷிகளால் சொல்லப்பட்டதென்று அவர்கள் பேரில் பொய்யான சாஸ்திரத்தை ஏற்றுவார்களா? இது தானு ரிஷிகள் பேரிலுள்ள பக்தி? ஞாயமில்லாததை இந்து சாஸ்திரமாகக் காட்டினுல் இந்து சாஸ்திரம் நிர்திக்கப்படுமே என்று உணராதவர்களா சாஸ்திர விஸ்வாசமுடையவர்கள். கடவுள்பேரில் அயோக்கியத் தனத்தை ஏற்றி வைத்திருக்கிறவர்களும், ரிஷிகள் பேரில் அபாண்டத்தைச் சொல்லி வருகிறவர்களும் வேத சுருதிகளின் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்ட இந்து மதத்திற்கு பல குப்பை கூளங்களை ஆதாரமாகக்காட்டி இந்து சாஸ்திரத்தை இழிவு படுத்துகிறவர்களுமா எங்களை நாஸ்திகர்களென்றும், இந்து சாஸ்திரத்தை நிந்திக்கிறவர்களென்றும் சொல்லுவது!

கடவுள் ஒன்று இருக்குமானுல் அதற்குக்கற்பிக்கப்பட்ட குணங்கள் அதன் தன்மையானுல் அவர் பேரில் பழியைப்போட்டு அவர்தன்மையை இழிவு படுத்துகிறவர்கள் ஆஸ்திகர்களா? கடவுள் பேரில் பழியைப் போடாதீர்கள், கடவுள் தன்மை எங்கும் எல்லா இடத்திலும் ஒரேமாதிரியாகவிருக்கும். அதற்கு மூக்கும் முகமும் கிடையாது அதற்கென்று ஒரு தனிப்பாஷை கிடையாது. எந்தப்பாஷையை யார் படித்தாலும் அதற்குச் சம்மதமே. நீங்கள் உயர்வடையவும் உங்கள் வயிறு நிறையவும் அவர் பேரைச்சொல்லி ஒரு சிறிதும் ஞாயமில்லாமல் எழுதி வைத்துக்கொண்டிருக்கும் ஏடுகள் அத்தனையும் ஒழிய வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் நாஸ்திகர்களா?

கடவுள் முகத்திலிருந்து பார்ப்பான்பிறந்தான். கடவுள் வாயினின்று வடமொழி வந்தது. முகத்திற்கு வாய் அதிகச் சொந்தமானதினுல் முகத்திலிருந்து வந்தவனுக்கு வாயிலிருந்து வந்தபாஷை அதிகச் சொந்தமாயிற்று என்றே வைத்துக் கொள்ளுவோம். ரிஷிகளல்லவா வேதத்தைக் கண்டெடுத்து மந்திரத்தைச் சொன்னவர்கள். அதினுலல்லவா ரிஷிகளுக்கு மந்த்ரத்ரஷ்டா என்றுபெயர். இப்பேர்ப்பட்ட ரிஷிகள் கடவுள் முகத்திலிருந்து வாததாகக்காணுமே. பறைச்சி, புலைச்சி, மீன் வாணிச்சி, தாசி, நாய், நரி, மான், முயல், குதிரை, பாம்பு, புற்று, கலசம், இத்தியாதிகளிலிருந்து பிறந்த ரிஷிகளின் பேர்களே எல்லா சாஸ்திரங்களிலும் அதிகமாக அடிபடுகிறது. இவர்கள் கடவுளுடைய காலிலிருந்து கூடப்பிறக்கவில்லையே. கடவுளுடைய வாயும் அதிலிருந்து வந்த வடமொழியும் இவர்கட்கு எப்படிச் சொந்தமாயிற்று? கடவுளுக்கு வடமொழிதான் தெரியும். இது தான் தேவபாஷை என்று பார்ப்பானும் சொல்லுகிறுன், அவர்கள் சாஸ்திரிகளும் சாஸ்திரங்களிலிருப்பதாகச்சிலசுலோகங்களும் சொல்லுகிறார்கள். இன்னொருபக்கம் தேவாரமும், பிரபந்தமும் இனிமையான தமிழில் கேட்பது கடவுளுக்குப் பிரியமென்று சொல்லுகிறார்கள்: எங்கு எதை யெப்படிச் சொன்னுலும் பாடில்லாமல் வயிறு நிறைய வேண்டும்.

திருப்பதி சமஸ்கிருத பள்ளியில் மற்றப் பையன்களைச்சேர்க்க மாட்டோமென்பதும், இலக்கணம் கற்றுக் கொடுக்க மாட்டோம் என்பதும் ஏன்? திருப்பதி சாமியும், உண்டிகைப்பணத்தின் அனுபோக பாத்தியதையும் பார்ப்பானுக்குத்தான் சொந்தமா? திருப்பதி சாமி ஒன்பது அவதாரமெடுத்ததினுல் அவரைப்பற்றி எல்லோரும் கேட்டிருக்கிறீர்கள். அவருடைய அவதாரம் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவ முடையதை யாரும் உணரவில்லையா? இதனுலே அவரும் அவருடைய பணமும் எல்லாருக்கும் சொந்த மென்பது தெரிகிறதே. மாவலியை மோசம் செய்யப் பார்ப்பானுக அவதார மெடுத்தார். அது ஏனென்றுல் மோசம் செய்வதற்குச் சுவாமி பார்ப்பானுகவே வருவது வழக்கம். வந்ததாகவே எல்லா புராண இதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. பார்ப்பானுக்குச்சாமி சொந்தமென்றுல் எல்லா அவதாரத்திலும் பாப்பானுகவல்லவோ சுவாமி பிறந்திருக்க வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணன் என்னும் பேரோடு கூடி மாடு மேய்க்கும் இடையனுகப் பிறந்தார். எல்லா அவதாரங்களிலும் கிருஷ்ண அவதாரமே விசேடமென்பது அவதாரக்கிரமத்தின் நிச்சயம். அவதாரங்களெல்லாம் எப்படி ஆனுலும் ஆச்சாரிகளெல்லாம் பார்ப்பார்களல்லவா என்று கேட்கலாம். தருமம் கெட்டு அதருமம் மேலிடுகையில் நான் அவதரிப்பேன் என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னுர். மததருமம் கெட்டு மதத்தால் அதர்மம் தலையெடுத்திருப்பதை யாரும் ஒத்துக் கொள்ளுகிருர்கள். திருப்பதி சுவாமியின் அவதாரம் இனி ஒன்று பாக்கியாகவுமிருக்கிறது. அந்தக்கடைசி அவதாரம் ராமசாமிநாயக்கர் தானே? யாருக்குத் தெரியும். அவர் சொல்லுவதை இரண்டு வித்வான்கள் உரை எழுதி விட்டால் ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னது போல பகவானின் பூரண அவதாரமாகாவிட்டாலும் அவருடைய அம்ச அவதாரமாகத் தடையேயில்லை. மேனுட்டின் போக போக்கியங்களை மேனுடு சுற்றி அனுபவித்துக் கொண்டு வரும் கிருஷ்ணமூர்த்தியின் தேகத்திற்குள் தத்தாத்திரேயர் புகுந்து கொண்டிருப்பதாகச் சொல்லும் பார்ப்பார்களுக்கு தன் தேக சுகத்தை கூட வெறுத்து இராப்பகலாய் சனசமூகங்களின் கவலையே குடி கொண்டிருக்கும் ராமசாமிநாயக்கர் தேகத்திற்குள் புத்த பகவான் வந்து புகுந்து கொண்டார் என்று சொல்லுதைக் கேட்பது கஷ்டமாகத்தானிருக்கும். என்றுலும்நியாயத்தையும் அனுபோகத்தையும் யாரால் மறுக்க முடியும்?

கடவுளிருக்கட்டும். சாஸ்திரம் மற்றவர்கள் படிப்பதற்கு இடம் கொடுக்க . வில்லையே என்னும் சமாதானம் கூடவே வருகிறது. விதிகளெல்லாம் தருமசாஸ்திரங்களென்னும் ஸ்மிருதிகளிலே புன்னது. தரும சாஸ்திரத்தில் பிராமணனுக்கு விதித்த விதிகளெல்லாம் இப்பொழுது சரியாய் பிராமணர்கள் கைக்கொண்டு நடக்கிருர்களா? சூத்திரனுக்கு இலக்கணம் சொல்லி வைக்கப்படாதென்று சாஸ்திரம் விதித்திருந்தால் 'கூலிக்கு வித்தை சொல்லிவைக்கப்படாதுபிராமணன்' என்கிற விதியின் பிரகாரம் பார்ப்பான் நடக்கிருனு? கோவை பிரம்மஞான மண்டபத்தில் மஞ்சேரிராமய்யர் செய்த பிரசங்கத்தில் "முன் இருந்ததை விட இப்பொழுது மதவிஷயங்களில் சீர்திருத்தம் வேண்டியிருக்கிறது. தற்காலத்தில் மத விஷயங்களில் விசேஷ மாறுதல் அமைந்து வருவதைப்பார்க்கிறோம். பகவான் ஜாதிவித்தியாசங்களை ஒழிக்க வேண்டும் என்றுர். பிறப்பினுல் ஒருவன் உயர்ந்த ஜாதி என்று கூறுவது சரியல்ல. கர்மங்களும் குணங்களுமே உயர்ந்த ஜாதியைப் பாகுபடுத்திக்காட்டுகின்றன: இந்த உண்மையை வைதீகர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிருர்கள். ஏன் உண்மையான பிராமணன் எழுநாட்களுக்கு மேல் தான் சாப்பிடும் உணவுப்பொருள்களை வைத்துக் கொள்ளப்படாது என்று தரும சாஸ்திரம் கூறுகிறது? அதன்படி நம் பிராண சகோதரர்கள் எவ்வளவு பெயர்கள் இப்பொழுது இருந்து வருகிருர்கள்? ஒருவரும் இல்லையென்று தானே கூற வேண்டும். ஆகையால் மனிதனுக்கு மனிதன் வேறுபடுத்திக் காட்டும் வித்தியாசங்களை அறவே ஒழித்துவிட வேண்டும்" என்றுர். இதைத்தான் நாங்களும் சொல்லுகிறோம். தரும சாஸ்திரத்தில் விதித்ததை பார்ப்பான் அறவே கைவிட்டு அவனுக்குநேர்எதிரிடையான உலகபோகங்களை எல்லாம் அனுபவிக்க ஆசைப்படுகையில் மற்றவர் படிக்கும் விஷயத்தில் தரும சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை என்கிறதை ஆதாரமாகக் காட்டி மற்றவர்களின் அறிவைத்தடுக்க முன் செய்த உல்லன்

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# புராணங்கள்.

## பெரிய புராணம்

### இயற்பகை நாயனர்.

மெய்கண்டான் எழுதுவது.

காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் குலத்தில் இயற்பகையார் என்பவர் ஒருவர் பிறந்திருந்தார். இவர் சிவனடியார்களுக்கும், சிவனடியார்போல வருகின்ற பார்ப்பனர்களுக்கும் அவர்கள் வேண்டியவற்றை இல்லையென்று சொல்லாமற்கொடுத்துதவினர். ஒருநாள் பரமசிவன் இவருடைய கொடைத்தன்மையை ஆராய்ந்தறியநினைத்து, சிவப்பிராமண வேடங்கொண்டு இவரிடம் வந்து சேர்ந்தார். இபற்பகையாரும் அவரைக்கண்டு வணங்கி தங்களுக்குவேண்டியது எதுவாயினும் அதைத்தருகிறேன் என்றார். அப்பிராமணரும், சிறிதும் மனங்கூசாது உனது மனைவியைக்கொடுக்க வேண்டுமென்று கேட்டார் நாயனரும் மகிழ்ந்து தனதுமனைவியிடஞ்சென்று உன்னை சிவப்பிராமணருக்குக்கொடுத்திருக்கிறேன், நீ அவருடன் செல்லவேண்டுமென்று சொன்னார். அப்பெண் அதைக்கேட்டவுடன், சிறிது மனக்கலக்கமடைந்து பிறகு ஒப்புக்கொண்டு சிவப்பிராமணருடன் போகச்சம்மதித்தாள் அப்பெண்ணை இயற்பகையார்சிவப்பிராமணரிடம் கொண்டுவந்துவிட்டு அழைத்துச்செல்லுமாறு வேண்டினார்.

சிவப்பிராமணர், நான் இப்பெண்ணை அழைத்துச் செல்வேனாயின் உனது சுற்றத்தாரால் எனக்குத்தீங்குண்டானாலுமுண்டாகும். ஆதலால் எனக்குத் துணையாகவந்து இவ்வூருக்குஅப்பால் விட்டுவரவேண்டுமென்றார். இயர்பகையார் அதற்குச்சம்மதித்து யுத்தகோலம்பூண்டு வாளாயுதத்துடன் புறப்பட்டார். பார்ப்பனர் முதலிலும் இயற்பகையின் மனைவி நடுவிலும், இயற்பகையார் பின்னும் சென்றுகொண்டிருந்தனர். இச்செய்தியைக் கேள்விப்பட்ட இயற்பகையாரின் சுற்றத்தார்கள், திரண்டுவந்து வளைத்துக்கொண்டு அப்பெண்ணை விட்டுச்செல்லுமாறு பார்ப்பனரை வற்புறுத்தினர். அவர் அஞ்சினதைக்கண்டு தைரியங்கூறி இயற்பகையார் தனது சுற்றத்தார்களை விலகிச்செல்லுமாறு கூறினர். அவர்கள் எங்கள்உயிர்போனாலும், இப்பெண்ணை மீட்டுக்கொண்டுதான் செல்வோமென்று சொல்லவே இயற்பகையார்க்கும் அவர்களுக்கும் சண்டையுண்டாயிற்று. இயற்பகையார், தனது வாளினால் எல்லோரையுங் கொன்றுவிட்டுப்பார்ப்பனருடன் புறப்பட்டார். திருச்சாய்க்காடென்னு மிடத்தையடைந்தவுடன், பார்ப்பனர், இயற்பகையாரை நோக்கி "இனிநமக்குத் துணைவேண்டாம் நாம் செல்லுகின்றோம்" என்று கூறிவிட்டார். இயற்பகையாரும் பார்ப்பனருடன் தமது மனைவியை கூட்டியனுப்பிவிட்டுச் சிறிது தூரம் வந்தார். மீண்டும்பார்ப்பனர், தன்னை யாரோவந்து வளைத்துக்கொண்டதைப்போலக் கூச்சலிட்டார். இயற்பகையார் மீண்டும் பார்ப்பனரும் மனைவியும் நின்றவிடத்திற்கு ஓடிவந்தார். அதற்குள் பார்ப்பனர் காணமற் போய்விட்டார். தன்மனைவிமட்டிலும் நின்றுகொண்டிருந்தாள். உடனே ஆகாயத்தில் பரமசிவன் காளை மாட்டின்மீது பார்வதியுடன்தோன்றி, இயற்பகையாரைநோக்கி, "நீயும் நின் மனைவியும் எனது உலகை யடைவீராக" என்றுகூறி மறைந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனர்திருத்தொண்டத்தொகையில் "இல்லையேயென்னா இயற்பகைக்கும் அடியேன்" என ஒருவரியினற் கூறுகின்றார். இதனைநம்பியாண்டார் நம்பிகள் "சிவன், தவவேதியனாய்வந்து வஞ்சகம்பேசி உன்மனைவியைக் கொடுவென்றுகேட்க இயற்பகையாருங் கொடுத்துப் புகழ்பெற்றார்" என்னுங்கருத்தடங்கிய ஒரு பாட்டினாற் குறிப்பிடுகின்றார். இதைவிரித்துச் சேக்கிழார் முப்பத்தைந்து பாடல்களாற் கூறுகின்றார். பரமசிவன் இயற்பகையாரிடம் வரும்போது கொண்ட வேடத்தைப்பற்றிக் கூறும்போது சேக்கிழார்:—

தூயநீறு பொன் மேனியில் விளங்கத்
தூர்த்தவேடமுந்தோன்ற வேதியராய்
மாயவண்ணமே கொண்டுதந்தொண்டர்
மறாதவண்ணமுங் காட்டுவான் வந்தார்

என்று கூறுகின்றார் "தூர்த்தவேடம்" என்று கூறுவதனால்கெட்டஒழுக்கத்தில் விருப்பமுடையவனைப்போலக் காணப்படும் வேடத்துடன் வந்தார் என்பது நன்குதெரிகின்றது. பரமசிவன் என்று சொல்லக்கூடிய கடவுள் இவ்வஞ்சக வேடத்துடன் சென்றாரென்றால் அவருடைய தகுதிக்கு ஏற்றதாகுமா என்பதைச்சிறிது யோசிக்க வேண்டுகின்றோம்.

பரமசிவன் பார்ப்பனச் சிவனடியாராகவந்து "உன்மனைவியைக்கொடு" வென்று கேட்டவுடன் இயற்பகையார் கொடுத்துவிட்டாராம். சிவனடியாரிலும், பார்ப்பனச்சிவனடியார் என்று கூறியிருப்பதில்தான் சூழ்ச்சி யிருக்கின்றது. பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரிடம் எதைக்கேட்டாலும் தடையில்லாமல் கொடுக்கவேண்டும்; அவ்வாறு கொடுப்பது பண்டையவழக்கம் என்பதையுங் காட்டுகிறது.

அன்றியும்திருநீறுபூசியபார்ப்பனனொருவன் வந்து "உன்மனைவியை எனக்குக்கொடு" என்று கேட்டவுடன்ஒன்றுந் தடைசொல்லாமல் மகிழ்ச்சியோடு கொடுத்தானென்று கூறுவது எவ்வளவு பொருத்தமானதென்பதைச்சிறிது ஆலோசிக்க வேண்டியது அவசியமாகும். உள்ளபடியேமானமுடைய ஒருவன் சிறிதும் தடையின்றித்தன் மனைவியை வேற்றானுக்குக் கூட்டிக்கொடுக்க இசைவானா? பக்திபெரிதா? மானம்பெரிதா? என்றுதான்கேட்கின்றோம். அன்றியும்தன் மனைவியின் சம்மதத்தை யறியாமல் எப்படிக்கொடுக்க முடியும்? பரமசிவனையும், பரமசிவன் அடியார்களையும் இடைவிடாமற்போற்றி வழிபடுகின்ற அன்பர்கள் எவரேனும் தங்கள் மனைவிமார்களைச் சிவனடியார்களுக்கு, அதிலும்பார்ப்பனச் சிவனடியார்களுக்குக் கொடுக்கத் தயாராயிருக்கின்றார்களா? என்தம்மாற்பெரிதும் போற்றப்படுகின்ற சேக்கிழாரும், பெரியபுராணமும், சைவமதமும் பெரியவரென்று கொண்டாடும் இயற்பகையார் செய்ததைப்போலச் செய்வதில் என்ன தடையிருக்கின்றது?

"விதிமணக்குல மடந்தை யின்றுனையிம்
மெய்த்தவர்க்குநான் கொடுத்தனன் என்ன
மதுமலர்க்குழல் மனைவியார்கலங்கி
மனந்தெளிந்தபின் மற்றிது மொழிந்தார்"

என்றதனால், இயற்பகையாரின் மனைவிதன்னை ஒது பார்ப்பனருக்குக்கொடுத்துவிட்ட செய்தியைக் கேட்டவுடன் மனக்கலக்கமடைந்து தெளிந்தாள் என்று கூறப்படுகின்றது. இதனால் அப்பெண் அப்பார்ப்பனப்பரதேசியுடன் செல்லுதற்குச் சம்மதிக்க வில்லையென்றறியலாம். பிறகு மனந்தெளிந்து சம்மதித்ததும் எதுபற்றி என்றால் தான் மாட்டேனென்று மறுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்ற எண்ணத்துடனேயே யாகும். இதிலிருந்து பெண்கள் அடிமைப்பட்டவர்களென்றகண்மூடிக்கொள்கையைப் பெரியபுராணம் வலியுறுத்துகின்றது ஒரு ஆடவன் தனமனைவியை அவன் விருப்பத்திற்கு மாறாக எப்படி நடத்தினாலும் அவற்றிற்கெல்லாம் அவள் சம்மதித்துத்தான் ஆகவேண்டுமாம். இதுவும் பெண்கள் உரிமையைத்தடுக்கும் மூடக்கொள்கையன்றோ.

அன்றியும்தான்செய்தகாரியம் மிகவும் அவமானமானதென்பதைத்தானறியாவிடினும் தனதுசுற்றத்தார்களறிந்து கூறியும் உணராதிருந்ததுடன் அவர்களோடு எதிர்த்துச்சண்டைசெய்து அவர்களையெல்லாங் கொலைசெய்துவிட்டாராம். இதைவிடக்கொடுஞ்செயலும், அக்கிரமமான செயலும், வேறென்ன விருக்கின்றது? தன் மனைவியை ஒரு பார்ப்பனனுக்குக் கூட்டிக்கொடுக்கும் பொருட்டு அநேகமனிதர்களைக் கொலை செய்வதுதானா புண்ணியம்? இதுதானா சிவனடியார் செய்யுந் திருத்தொண்டு?

இயற்பகையார் கடைசியில் திருச்சாய்க்காடென்னுமிடத்தில் மனைவியையும் சிவவேதியரையும் விட்டுப்பிரிந்து சிறிதுதூரம் வந்தவுடன், மீண்டும் வேதியர் ஓலமிட இயற்பகையார் திரும்பி ஓடிப்பார்க்கும்போது சிவவேதியர் மறைந்துவிட்டார் என்று கூறப்படுவதிலிருந்து சிவவேதியர் பரமசிவனாக இருந்தமையால் மறைந்துவிட்டார் என்று கூறுவதா? அல்லது நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்ததனால் தன்னால் அப்பெண்ணை வைத்து ஆளமுடியாது என்ற பயத்தினால் ஓடி ஒளிந்து கொண்டார் என்று கொள்வதா? என்பதுநமக்கு விளங்கவில்லை. பிறகு வழக்கம்போல் சிவபெருமான் காளைமாட்டின்மேல் ஆகாயத்தில்தோன்றினார்என்றுகூறப்படுவது எவ்வளவுதூரம் உண்மையென்பதை அறிஞர்கள் அறியக்கூடும்.

இக்கதையினால் பார்ப்பனனுக்கு உயர்வும், பார்ப்பனன் எதைக்கேட்டாலும் மற்றவர்கள் கொடுக்கவேண்டு மென்பதும், பெண்கள் தமதெண்ணப்படி நடக்க வுரிமையற்றவர்களென்பதும் ஆடவர்களுக்கு அடிமையாக விருந்து அவர்கள் கூறும் தகாதசெயல்களையும் செய்யவேண்டு மென்பதுமான மூடக் கொள்கைகளையெல்லாம் இப்பெரியபுராணம் போதிக்கின்றது. இக்கதை நடந்திருக்குமாயின் தமிழர்க்கு அவமானம் உண்டாக்குகின்ற கதைகளில் இதைப்போன்ற கதை வேறொன்று இருக்கிறதென்று கூறமுடியாதென்பதே நமது அபிப்பிராயமாகும்.

## திருநெல்வேலியில் சுயமரியாதைப் பிரசாரம்

"திருநெல்வேரி பிரமசமாஜகழகத்தில், 16 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருவாளர் ச. ஜோ. சச்சிதானந்தா அவர்கள் எம், ஏ. ஆத்மாவும் அதன் இலக்கணங்களும்" என்ற விஷயத்தைப் பற்றி பிரசங்கம் செய்தார்கள். அதில் ஒருவன் ஒருதீச்செயலைச்செய்து விட்டு இராமேஸ்வரம், காசி முதலிய இடங்களுக்குப் போவதினாலோ, அபிஷேககட்டளை நடத்துவதினாலோ, பிராமணர்களுக்கு அன்னதானம் முதலியன செய்வதாலோ, அல்லது இதுபோன்ற எக்காரியங்களினாலோ, அத்தீச்செயலின் பயனினின்றும் தப்பமுடியாதென்றும், மனமார தான் செய்த குற்றத்தை உணர்ந்து அதற்காக மனம் வருந்தி, இனி அதைச் செய்வதில்லை என்ற மனவைராக்கியத்தோடு அக்குற்றத்தை ஒழித்தலே, அவனை நல்வழிக்கு ஆளாக்குமென்றும் விளக்கிக் காட்டினார்கள்.

சமாஜ உதவி அமைச்சர் கனம் பிச்சையா பிள்ளை அவர்கள், பலகெடுதல்களுக்கும் காரணமாய் நம்தேசத்தைப் பாழாக்கிக்கொண்டிருக்கும், மூடநம்பிக்கையின்மேல் கட்டப்பட்டுள்ள பழைய பல கொடிய பழக்கங்களை வேருடன் தகர்த்தெறிந்து விட்டாலன்றி, தேசமுன்னேற்றத்திற்கு இடமிராது என்பதைப்பற்றி ஒரு சிற்றுரை செய்தபின், கூட்டம் கலைந்தது.

காரியதரிசி

# திருக்குறளும், புராணக்கதைகளும்.

### முழுத்தறி எழுதுவது

திருக்குறளில் பலவிடங்களில் புராணக்கதைகள் உவமைமுகத்தானும் புதைபொருள்களாகவுங்கிடந்து விளங்குகின்றன. அவற்றுள் சிலவற்றை ஈண்டு காட்டுதும்.

கௌதமமுனிவர் மனைவியாகிய அகலிகையை இந்திரன் விடியலில் வேடம்பூண்டு புயங்கினதை அறிந்த முனிவர் சீற்றங்கொண்டு அவன் ஆயிரங்கண்ணனாகுக என்று சபித்தனரென்பது எவருமறிந்ததே. நீத்தார் பெருமையை விளக்குமுகத்தான் இச்சான்று பகரப்பட்டுளது. "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங் கரி" இந்திரப்பதவி பெறுபவர் பலயாகங்களையும் நீண்டதவத்தினையும் செய்தவராவர். இராமரடிபட்ட நிமித்தம் அகலிகையின் கற்சாபம் நீங்கிற்றென்பர். ஒரு யோனியிற் காமுற்றதினால் உடலனைத்தும் கணக்கற்ற யோனிகளாகக்கடவதென்றசாபம்நீங்கவில்லையே.

"முன்னொரு காலத்திந்திரனுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ்விண்ணவரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற் கண்ணாயிர மீந்தோன் சார்வென்பர்
கன்னியர் நாளுந்துன்னமர் கண்ணார் கோயிலே"

தகைமாண்டதக்கார், குன்றன்னார், நிறைமொழி மாந்தர், சிறந்தமைந்தசீரார், பெரியார், அறவோர், துறவோர், ஏந்தியகொள்கையார், இவரன்னார் செறின் இந்திரப்பதவி பெற்றாருமுய்யார். ஏந்திய கொள்கையார்சீறின் இடைமுரிந்து வேந்தனும் வே(வெ)ந்து கெடும்; இந்திரபதம்பெற்ற நகுடன் பிழைசெய்து அகத்தியமுனிசாபத்தால் அதனை இழந்தானென்பர்.

தவம் நோன்பு இவற்றை இடையறாது செய்துவருபவர்கள் யமனைக்கண்டு நடுங்கார், அவனை வெல்வர், ஏனையர்க்கு அது இயலாது. என்றும் பதினாறுண்டு என்ற வரம்பெற்ற மார்க்கண்டன் வரலாறு இதனைவிளக்கும். மார்க்கண்டன் சிவபூசையின் பலத்தால் தென்றிசைக்கோன் பாசத்தை வென்றுய்ந்தான். எம்பெருமான் மார்க்கண்டன் நோன்பைக்கண்டு மகிழ்ந்து, 'மைந்தனே நீ நம்மை மெய்யன்போடு பூசைசெய்தமையால் நாம் உனக்கு முடிவில்லாத ஆயுளைத்தந்தோம்' என்று திருவாய்மலர்ந்தனரென்று கந்தபுராணங்கூறும். "கூற்றங்குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல்தலைப்பட்டவர்க்கு"

சேலினேரனைய கண்ணார் திறம்விட்டுச் சிவனுக்கன்பாய்ப்
பாலுநற்றயிர் நெய்யோடு பலபல வாட்டியென்றும்
மாலினைத் தவிர நின்றமார்க்கண்டர்க்காக வன்று
காலனை யுதைப்பர் போலுங் கடவூர் வீரட்டனாரே.

நீற்றினை நிறையப்பூசி நித்தலு நியமஞ்செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டு மந்தணனாரைக் கொல்வான்
சாற்று நாளற்றதென்று தருமராசற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே.

தோடுலா மலர்கடூவித் தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநாளணுகிற்றென்று மெய்கொள்வான் வந்த காலன்
பாடுதான் செல்லுமஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன்மாளச் சாய்க்காடுமேவினாரே.

கிருஷ்ணன், கண்ணன் என்றவர் யாதவகுலத்திற் பிறந்து கோபிகாப் பெண்கள் நீராடியபொழுது அன்னாராடையை எடுத்து மரமேறியொளித்திருந்து பின்னர் அவர் துயரத்திற்கிரங்கி அவருடன் விளையாடித் தங்குழலால் மகிழ்வித்தனரென்பதை நாலாயிரப்பிரபந்தப் பதிகங்களிற் பரக்கக்காணலாம். கால்நடைகளைப் பராமரிக்கும் மக்கள் ஆயராவர். அன்னார் காடுகளில் மாடுமேய குழலூதிப்பொழுது போக்குவதுமன்றி அதனால் மாடுகளை மாலைப்பொழுதில் ஒருங்கே அழைப்பரென்பாருளர். மாலைப்பொழுது வந்தவிடத்து அதனைக்கண்டு இரங்குந்தலைவி முன் ஆயன்குழல்போன்று இனிமைசெய்த இடையனது வேணுநாதம் இப்போது நெருப்புப்போன்று சுடுவதாகி மாலைக்குத் துணையாகித் தன்னைக்கொல்லும்படையாயிற்றே யென்ற பொருளில் வரும் குறள் இதுவாகும்,

'அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன் குழல்போலும் கொல்லும் படை' தானே சுடவல்ல மாலை இந்தத் துணையாகிய கருவியையும் பெற்றால் மிகுதுயரஞ்செய்யுமன்றோ? பாரதத்தில் கிருஷ்ணன் தூது சென்றமையையும் இக்குறள் நினைப்பூட்டும். கிருஷ்ணன் யாதவப்பெண்கள் சேமித்துவைக்கும் வெண்ணெய்யை மாயமாகத் திருடிவிழுங்குவனென்ற கொள்கையால் அவனுக்கு வெண்ணெய்திருடி என்ற பட்டப்பெயரும் வழங்குவதுண்டு. இப்பெயரை நினைப்பூட்டும் 'பன்மாயக்கள்வன் பணிமொழி யன்றோநம்பெண்மை யுடைக்கும் படை' என்றகுறளாகும். நிறையழிதல் எனுமதிகாரத்திற்காணப்படும். பிரிந்துபோன காதலன் வாராமைபற்றி மாலைகண்டிரங்கி உறுப்புநலனழிந்து, நெஞ்சோடுகிளத்தி, மறையிறந்து மன்றுபடுங்காமத்தால் நிறையழிந்து வாய்விட்டுப்பேசுந்தலைவியின் கூற்று. அவள் தலைவன்வரின் தான்பிணங்குவனென்றும். பிணங்கினால் அவன் சொற்களாலுஞ் செயல்களாலும் நீங்கேமென்றும் எண்ணியிருந்ததெல்லாம்காணாமல் கலவியிலே தன்னினுமுற்படும்படி தோன்றி தம்மினும் அதிக அன்புடையோனாகச் சொல்லுஞ்சொற்களால் அவனது நிறையழியாதொழியாது, அதாவது அழியுமென்பது திண்ணம். மாயவனும்... ஆயவடிவு பதினாயிரங்கொண்டான்' (மகா பாரதம் கிருஷ்ணன்தூது)

'எவ்வுலகும் தாயஅடியினைதன்' என்று பாரதத்திலும், மூவடியும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத் தாவியசேவடி...திருமால் சீர்கேளாத செவி என்ன செவியே' என்று சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன. திருமால் வாமனவடிவமெடுத்து மகாபலியிடம் மூன்றடிமண் கேட்டுப்பெற்று, பிறகு விசுவரூபமெடுத்துத்தன் இரண்டு அடிகளால் மண்ணையும் விண்ணையுமளந்தனன். ஆதலால் அடியளந்தான் என்றதொடர் விட்டுணுவைக்குறிக்கும். 'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅய தெல்லாம் ஒருங்கு' சோம்பலில்லாத, முயற்சியுடைய அரசன் 'திருமால் நிலப்பரப்பனைத்தையும் ஒருங்கே பெற்றதுபோல அனைத்தையும் எய்துவன் என்பது கருத்து.

ஐம்புலன்களின் நுகர்ச்சியைத்துறந்த யோகிகள் செங்கண்மாலுலகமெய்துவர் என்பர். அவர்களால் அடையப்படுவதாகிய கமலக்கண்ணனது உலகம் புணர்ச்சிமகிழ்வோர்க்குப் பெரிதன்று. தாமரைக்கண்ணான் என்பது இந்திரனென்றுரைப்பாருமுளர். அது அவனுக்குப் பெயரன்றே? 'தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல் தாமரைக்கண்ணான் உலகு'. பாங்கனே, பேரின்பத்திற்கு உரிய நீ சிற்றின்பத்திற்குரிய பாங்கனாதல் தகாதென்ற தலைவன் கூறுங்கூற்று.

மலர்மிசையேகினான்சிவபெருமான். அடியாரின் இருதயமாகிய தாமரை மலர்மீது இறைவன் முன் வந்தான், இன்னும் வருவான். திருவாசகம் திருக்கோத்தும்பி செய்யுள் 1,20 ல் 'பூவேறுகோனும்' 'பூமேலயனோடும்' என்று வருவனவற்றிற்கு மலர்மீதேறிய இறைவனாகிய பிரமனும், தாமரைமலரில் வாழ்கின்ற பிரமன் என்றும் உரைகூறியுளர். மலரின்மேல் நடந்தானது மாட்சிமைப்பட்ட திருவடியைத் தொழுபவன் போகநுகர்கின்றான், வீடுபெறுகின்றான் என்று அருகமதத்தார் கூறுவர்.

தேவர்களுக்காக கடலைக்கடைந்து அமிர்தம் பெறுமுன்னர்வாசுகி விடத்தைக்கக்க அதைக்கண்டு சிவபெருமான் விரைந்து விடத்தை உட்கொண்டபோது அது அவரது கண்டத்தில் நின்றகாரணத்தால் நீலகண்டனெனப் பெயர்பெற்றானென்று புராணங்கூறும். 'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்றார் நாயனாரும். நஞ்சுபெயக்கண்டும் அதனைமாற்றாது உண்டு அமைவர் அனைவராலும் விரும்பத்தக்க அறம்பொருளின்பத்தின் கற்குணங்கள் பலவும் உடைத்தாயிருக்க விரும்புவார். கண்ணோட்டமென்னுங் கழிபெருங்காரிகை உளவாதலினால் உலகங்கெடாது நடைபெறுகின்றது. 'நஞ்சுகண்டத்தடக்கிடம்பன்' என்பது தேவாரம்.

மகேசுரபூசை செய்து மகிழ்ந்து வந்த இளையான் குடிமாறனார் தம்முடைமை யனைத்தையும் விற்று கடன்கொண்டு வறுமை யுற்றிருந்தும் திருப்பணியை விடாது செய்துவர மாரிக்காலத்தில் ஓயாமல் மழை பெய்யும் ஒருநாளில் உணவுப் பொருளொன்று மின்றிப் பட்டினி கிடக்க நேரிட்டபோது அவரது அன்பின் திறனை அறியுமாறு சிவபெருமான் அவரிடம் சைவ வேடந்தரித்து விருந்தினராய் வந்தனர். உடனே நாயனார் பசிப்பிணி யுற்றுத் துயில் கொள்ளாத மனைவியை எழுப்பி அச் சைவருக்கு எப்படியாயினும் உணவு கொடுக்கவேண்டுமென்று கூற, நள்ளிரவிலென் செய்வது. அயலாருங் கொடாரே, என்று மனம் வருந்தி பகலில் விதைத்த விதையை வாரிக்கொண்டுவரின் உணவாக்கலாமென, நாயனார் அங்ஙனமே மையிருளைப் பொருட்படுத்தாமல் போய் முளைத்த நெல்லைக் கொண்டுவந்து கொடுக்க அதை யுலர்த்தி அரிசியாக்கி அமுது செய்து படப்பையிற் புற்களைக் கொய்து கறியாக்கி அருளினள். துயில் கொண்ட சைவரை விருந்துண்ண மாறனார் எழுப்பியபோது அவர் சோதிவடிவாய்த் தோன்றினதுமன்றி மனைவியுடன் தம் அடியையடைந்து பேரின்பம் பெறக் கட்டளையிட்டு மறைந்தனர். 'வித்தும் இடல்வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.' விருந்தினரை யூட்டி மீத உணவை உண்ணுமொருவன் புலத்தின்கண் விளைதற்பொருட்டு வித்து விதைக்க வேண்டாம். தானே விளையும். 'அன்புறுமனத்தால் நாதன் அடியவர்க்கு அன்பு நீடு மன்புகழ் இளைசைமாறன்' என்று பெரிய புராணம் துதிக்கும். அன்றியும் அழலோம்பும் அப்பூதியடிகள் புராணமும் இவ்வுண்மையை விளக்கஞ்செய்யும்.

மக்கட்கு முயற்சியமையாதது. முயற்சி மெய்வருத்தக் கூலிதரும். இடையறாது முயற்சிப்பார் ஊழையும் வெல்லுவர். திருவுண்டாதலும் அதனாலேயே. மடியினால் வறுமையும்நிரப்பும் வந்துறும். அறிவு அதிஷ்டம் இல்லையானால் பழி யேற்படாது. ஆள்வினை யில்லாவிடின் அது பழியாகும்; மாமுகடி, தௌவை, மூதேவி, உடனுறைவாள். அது உளதேல் சீதேவி, இலக்குமி, நல்லாள் பொருந்தி நிற்பள். 'மடியுளாள் மாமுகடி யென்ப, மடியிலான் தாளுளாள் தாமரையினாள்.' தாமரையான் பிரமன், தாமரையாள் தேவி நாவின் கிழத்தி அல்லது நாமகள், தாமரையினாள் திருமகள். பிரமா, நாமகள், திருமகள் மூவருந் தாமரையையே இருப்பிடமாகக் கொண்டமையால் தாமரை சிறந்த பூவாயிற்றுப்போலும்; தெய்வ வணக்கத்திற்கு உரிமை யுற்றதுபோலும்.

# 'புண்ணிய ஸ்தலங்கள்'

(சித்திரபுத்திரன் எழுதுவது).

"புண்ணிய ஸ்தலம்" என்னும் தலைப்பின் கீழ் புண்ணிய ஸ்தலங்கள் என்பவைகளைப்பற்றி என் எழுதிக்கொண்டு வரப்படுகின்றது என்பதுபற்றி முந்தின வியாசத்தின் முதல் பகுதியிலேயே தெளிவாய் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தவிர முந்தின வியாசத்தில் பண்டரிபுரம் என்னும் "புண்ணிய ஸ்தலத்தின்" யோக்கியதையையும் விளக்கி இருக்கிறது.

பண்டரிபுரம் வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலம். அந்த ஸ்தல புராணத்தில் ஒரு சமயம் அந்த முக்கியத்துவத்திற்கு ஏற்ற காரணம் ஏதாவது குறிப்பிட்டிருக்கக்கூடுமோ என்பதாக சந்தேகப்படக்கூடுமானாலும் வைணவ பக்தர்களின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும் பக்தவிஜயம் என்னும் புஸ்தகத்தின் சுருக்கமாகிய பக்தலீலாமிர்தம் என்னும் புத்தகமானது, சைவர்களுக்கு எப்படி சைவ பக்தர்களின் சரித்திரத்தைச் சொல்லக் கூடியதான சைவ புராணமாகிய பெரிய புராணமோ, அதுபோல்—ஏன்? ஒரு விதத்தில் அதைவிட முக்கியமானதென்றுகூட சொல்லலாம். எப்படியெனில், பெரியபுராணம்என்பதுசுந்தரமூர்த்திசுவாமி என்கிற ஒருவர் பாடிய ஒரு பாட்டிலிருந்த பக்தர்களின் பெயரைத் தெரிந்து அதற்கு ஆதாரமாக நம்பியாண்டார் நம்பி என்பவர் பாடிய ஒருசில—அதாவது ஒரு நூறு பாட்டைக் கொண்டு நாலாயிரத்துச் சில்லரைப் பாட்டுகளாக்கி அவற்றிற்கு வேண்டிய சங்கதிகளை தமது சொந்த அபிப்பிராயமாக நுழைத்து பாடிய புஸ்தகமாகும். அதுவும் சமணர்களுக்கு விரோதமாய் அவர்கள் மீதும் அவர்களது குற்றமற்ற நூல்களின்மீதும் உள்ள துவேஷத்தாலும் தமது சமயவெறியாலும் கற்பிக்கப் பட்டது என்றுகூடச்சொல்ல இடமுள்ளதாகிய நூல். பக்தவிஜயமோ அப்படிக்கில்லாமல் ஏதோஒரு முனிவர் ஏதோ ஒரு ஆசாமிக்கு எல்லா சங்கதிகளும் சொனைதாகவும் சிவன் பார்வதிக்குச்சொன்னதாகவும்எழுதிய புஸ்தகம். ஆனதால் சேக்கிழார் என்கின்ற ஒரு மனிதன்சொன்னதைவிடசிவன்முனிவர்என்கின்றவர்கள் சொன்னது என்பதுஉயர்ந்ததுஎன்பதில் இவற்றை நம்பும் பக்தர்களுக்கு சிறிதும் சந்தேகமிருக்க நியாயமில்லை.

எனவே இப்பேர்ப்பட்ட புஸ்தகத்தில் உள்ளதையேநான் எடுத்து எழுதி இருக்கிறதே ஒழிய மற்றபடி மதஅபிப்பிராயம என்பதல்ல. அதாவது:—

தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் பெண்ஜாதியான இந்திராணி திருமால் என்கின்ற சாமியின்பேரில் காதல் கொண்டதாகவும், சாமியும் அதற்கு சம்மதித்து பூலோகத்திற்கு போய் அங்கு 60000 வருடம தவம் செய்யச் சொன்னதாகவும், அதற்குப்பிறகு சாமி கிருஷ்ணனாக அவதரித்ததாகவும், இந்திராணியும் ராதையாகப்பிறந்ததாகவும், பிறகு இருவரும் கூடினதாகவும், இதைக்கண்ட கிருஷ்ணனின் சொந்தப் பெண்ஜாதியாகிய ருக்குமணி கோபங்கொண்டதாகவும், அதன் நிமித்தம் ராதை கிருஷ்ணனை தனக்கே புருஷனாக்கிக் கொள்ள காட்டிற்கு தவத்திற்குப் போனதாகவும், இந்த சமயத்தில் கிருஷ்ணன் ராதையைப் பிரிய நேர்ந்ததால் துறவி வேஷம் பூண்டு காடு காடாய் திரிந்து ஏதோ ஒரு காட்டில் ராதையைத் தவக்கோலத்தில் கண்டுபிடித்ததாகவும், ராதை கிருஷ்ணனைப் பார்த்து "நீ ஒரு வஞ்சகன், என் முன் நில்லாதே" என்று கோபித்ததாகவும், கிருஷ்ணன் மதிமயங்கி மூக்கில் கை வைத்துக் கொண்டு 28 துவாபர யுக காலமாய் நின்று கொண்டிருக்கின்றதாகவும், அந்த காக்ஷியே பண்டரிநாதன் என்றும் மற்றும் இது போலசில ஆபாசக்கதைகளும் எழுதப்பட்டு பண்டரிபுரத்திற்கு ஆதாரமாகசொல்லப்படுகிறது. எனவே, இம்மாதிரி ஆபாசமும் புருகும் கொண்டதான பண்டரிபுரத்தை ஒரு பெரிய புண்ணிய ஸ்தலமாகக் கருதி மக்கள் ஏராளமாக பணம் செலவு செய்து கஷ்டப்பட்டு யாத்திரை போவதுடன் பட்டை பட்டையாய் நாமமும் போட்டுக்கொண்டு "பண்டரிநாதா விட்டல்லே! பாண்டுரங்கா விட்டல்லே!" என்று கூப்பாடு போட்டுக்கொண்டு குதித்துக்கொண்டு போவதையும் கருதினால் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாகவும் கஷ்டமாகவும் இருக்கும் என்பது சுலபத்தில் வெளிப்படுத்தக் கூடியதாயில்லை என்பது பற்றியும் முன்னமேயே எழுதப்பட்டிருக்கின்றது.

ஜகநாதம் என்பதைப்பற்றி சிறிது ஆராயலாம்.

## ஜகநாதம்.

ஜகநாதம் என்பது இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் மிக முக்கியமானதுஎன்று சொல்லப்படுவது. இந்துக்கள் என்போர்களில் தென்னாட்டில் உள்ள சைவர்களில் யாரோ ஒருசிலரால் மதத்துவேஷம் காரணமாக ஜகநாதம் ஒரு சமயம் அலட்சியமாகக் கருதப்பட்டாலும் இந்தியாவில் உள்ள பெரும் பாலோரான இந்துக்கள் என்பவர்கள்எல்லோராலுமேமுக்கியஸ்தலமாகக்கருதப்படுவது. அந்த ஸ்தலத்தின் முக்கியத்துவத்திற்கு உதாரணம் என்னவென்றால், அந்த ஜகநாதம் என்கின்றஊரின் எல்லைக்குள் ஜாதி வித்தியாசம் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்கள். அதற்கு உதாரணமாக அந்த கோவில் பூசை பண்ணுகின்றவர்கள் அந்தப் பக்கத்திய நாவிதர்கள், அவர்கள் குளத்தருகில் அடைப்பத்துடன் நின்றுகொண்டு க்ஷவரம் செய்வார்கள், பிறகு கோவிலில் பூசாரிகளாகவும் இருப்பார்கள். அந்தகோவிலில் பூசை செய்யும் உரிமையே அந்த ஊரிலுள்ள நாவித வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தான் உண்டு என்கின்றார்கள். அந்த சுவாமிக்கு முன்னால் சாப்பாட்டை மலைபோல் குவித்து ஆராதனை செய்வார்கள். அந்தச் சாதத்தைப் பூசாரிகள் பங்கு பிரித்து எடுத்துக்கொண்டு வெளியில் வந்து விற்பார்கள். யாத்திரைக்காரர்கள் யாராயிருந்தாலும் அதை வாங்கிச் சாப்பிட வேண்டும். மற்றபடி கடையிலும் சாதத்தை சட்டியில் வைத்து விற்பார்கள். ஜாதி வித்தியாசம் என்பதில்லாமல் யாரும் வாங்கிச் சாப்பிடுவார்கள். தவிர அந்த ஸ்தல எல்லைக்குள் எச்சில் வித்தியாசம் பார்க்கக்கூடாது என்பார்கள். இலையில் உள்ள சாப்பிட்ட மீதியைஎடுத்து திருப்பவும் சட்டிக்குள்போட்டுக்கொள்ளுவார்கள். கடைகளில் விற்பனைக்காக வைத்திருக்கும் சாதச் சட்டியில் யாரும் கைவிட்டு சாதத்தை எடுத்து வாயில் போட்டுப் பார்த்து மீதியை சட்டியிலேயே போட்டுவிடலாம். அதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

ஜெகநாதத்திலுள்ள அந்தஜெகநாதர்கோவிலுக்குள் யாரும்போகலாம்; சாமியைத்தொடலாம். சாமியைச்சுற்றலாம். காலைத் தொட்டுக் கும்பிடலாம், இதுமாத்திரமில்லாமல் அந்தஎல்லைக்குள் யாரும்திதி, விரதம், தர்ப்பணம் முதலிய அனுஷ்டானங்கள் ஒன்றும் செய்யக்கூடாதாம், செய்தால்பாவமாம். அன்றியும் அங்குள்ளசாமிகள் கிருஷ்ணன், பலராமன், சுபத்திரை ஆகிய மூவர்கள். அதாவதுமற்ற இடங்களைப்போல்சாமிபுருஷன் பெண்ஜாதியுடன் இல்லாமல் அண்ணன், தம்பி, தங்கை ஆகிய மூன்று பேர்களும் தங்கையாகிய சுபத்திரையை நடுவில் வைத்து அண்ணன்மார் இருவர்களும் இரு பக்கத்தில் நிற்கின்றார்கள். இதுவும் மரக்கட்டையில் அரைகுறையாய் செய்த உருவங்கள்தான் விக்கிரகங்கள்.

இந்த ஊரைப்பற்றிச் சொல்லும்போது 'சர்வம் ஜகநாதம்' என்று சொல்லுவது ஒரு வழக்கம். அதாவது எந்த விதமான வித்தியாசமும், அதாவதுஜாதி, மதம், எச்சில், விரதம்முறைமுதலியவித்யாசம்அந்தஎல்லைக்குள் இல்லைஎன்பதைகாட்டுவதற்காகச் சொல்லுவது. இதற்கு ஆதாரமாக இரண்டுவிதமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒன்று, இப்படி விஷ்ணு என்னும்முழுமுதற் கடவுளின் அவதாரமாகிய கிருஷ்ணன் என்னும் கடவுள் இறந்த பிறகு அந்தக் கடவுளின் பிணத்தை துவாரகைச்சுடுகாட்டில் வைத்து தகனம் செய்து அது எரிந்துகொண்டிருக்கையில் திடீரென்று சமுத்திரம் பொங்கியதால் துவாரகை முழுவதும் தண்ணீருக்குள் ஆழ்ந்துவிட்டபோது இந்தகடவுளின் பிணமும்எரிந்துகொண்டிருந்த சுடுகாடும் தண்ணீருக்குள்மூழ்கநேரிட்டதால் அரைகுறையாய் வெந்தபிணக்கட்டையானதுதண்ணீரில்மிதந்து கரைஓரமாய் ஒதுங்கியதாகவும், அந்தஊருக்கு ஜகநாதமென்றுசொல்லப்பட்டதாகவும் அந்தஊரார் அந்தக்குறைபிணத்தை எடுத்துஅதன்சக்தியை ஒருமரக்கட்டையில் ஏற்றி அம்மரக்கட்டையில் இருந்து குறை பிணம் போலவே ஒரு உருவம் செய்துஅதை வைத்துபூசித்துவருவதாகவும் அந்தஸ்தலத்தின் சரித்திரம் சொல்லுகின்றது.

மற்றொன்று, கிருஷ்ண பகவானின் லீலாவிநோதங்களில் ஒன்றாகிய கோபிகளுடன் கூடி குலாவிவருவதை கிருஷ்ண பகவானின் தங்கையாகிய சுபத்திரை பார்த்து பொறாமைப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் சென்று "ஓ அண்ணாவே! நீ எவ்வளவோ அழகாகவும் பெருமை உள்ளவனாகவும் இருக்கின்றாய். உன்னுடன் கூடி அநுபவிக்கும் பெருமை கோபிமார்கள் எல்லோரும் பெற்று அநுபவித்து வருகின்றார்கள். ஆனால் நானோ

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# மேல் நாட்டை பார்க்கும்பொழுது இந்தியர்களும் மனிதர்களா?

## தற்சமயம் நாம் யாரை பகிஷ்கரிக்கவேண்டியது.

திரு. கெ. எஸ். நாராயணன் எழுதுவது.

வைத்தியரால் கொண்டு வரப்பட்ட, கூர்மையானதும், மின்னலைப் பழிக்கின்ற அவ்வளவு பளபளப்பானதுமான ஆயுதங்களைப் பார்த்தவுடன் ஆப்ரேஷன் செய்யப்படவேண்டிய ஒருவருக்கு ஒருவிதமான பீதியும், கோபமும ஏற்படுவதுபோல் "மேல் நாட்டைப் பார்க்கும் பொழுது இந்தியர்களும் மனிதர்களா" என்ற தலைப்பெயர் கொடுத்து எழுதியதைப் பார்த்த போதுநல உணர்ச்சியற்ற ஒரு சிலருக்கோ பலருக்கோ கோபம் உண்டாகலாம். விஷயம் தெரிந்த எந்த அறிவாளியும தன் தேசமக்களின் க்ஷேமத்தை முன்னிட்டு பயங்கரமான எவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதிலும் அதைக்கண்டு பயப்படுவதில்லை. அதுபோல் நம்தேசத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அபகீர்த்தியை உண்டுபண்ணக்கூடியதாகத் தெரிகின்ற அவ்வளவுபயங்கரமான தலைப்பக்கத்தின் கீழ்எழுதனக்கும் கொஞ்சமும் இஷ்டமில்லையானாலும் அதைவிட வேறு வழியில்லாததால் ஆபத்தான இந்த அவசர சமயத்தில் ஆப்ரேஷன் ஆயுதங்கள் போன்ற எனது கடுமொழிகளை உபயோகிப்பதில் யாதொருகுற்றமுமில்லை என்பதை சமரியாதை உள்ள, உண்மையை உணர்ந்த, எந்த அறிவாளியும், அதுவும் இந்த 20 வது நூற்றாண்டில்மறுப்பார் என்று சொல்லுவதற்கில்லை.

இந்தியர்களாகிய நாம் மேல் நாட்டாருடன் தலை நிமிர்ந்துநடக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோமா வென்று பார்த்தால் மனிதஜாப்தாவிலிருந்து நீக்கப்பட்டு மிருகங்களினுடைய ஜாப்தாவில் சேர்க்கப்படக்கூடிய தன்மையிலேயே இருக்கிறோமென்பது மிகையாகாது.

மனித உருவத்துடன் மிருக ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருந்த தேசங்களெல்லாம்தற்சமயம் கல்வி, கைத்தொழில் நூதனஆராய்ச்சிகளின் மூலம் குன்றின் மேலிட்ட தீபம் போல்பிரகாசித்துக்கொண்டிருக்கநாம்'பூர்வீகநாகரீகத்தில் சிறந்தவர்களிடமிருந்து மேல் நாட்டார் நாகரீகங்களைக் கற்றுக் கொண்டார்கள்" என்று வாய் வேதாந்தம் மட்டும் பேசி காரியத்தை விட்டு மனப்பால் குடித்துக் கொண்டு முட்டாள்தனமான மூடபழக்க வழக்கங்களுக்கும் அர்த்தமற்ற சடங்குகளுக்கும் நம் வாழ்நாட்களை, எல்லாம் செலவிட்டு, யாதொரு பிரயோஜனமுமின்றி, குடிக்க கஞ்சிக்கும் உடுக்க உடைக்கும் கெதியின்றி கடைசியில் "நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்" என்று நம் குறுகிய புத்திக்கு முடிவைஏற்படுத்தி அதற்குள் ஐக்கியமாகி விடக்கூடியவர்களாயிருக்கிறோம.

நாகரீக மடைந்ததாகச் சொல்லப்படும் ஒவ்வொரு தேசத்தாரும் தங்களுடைய விசாலமான அறிவால் பொதுநல உணர்ச்சி கொண்டு ஒவ்வொரு நூதன விஷயத்தையும் ஆராய்ச்சி செய்து அதன் மூலம் தங்கள் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நலம் செய்திருக்கிறார்கள்; நலம் செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் பழைய ஏடுகளை மட்டும் பார்த்து "இந்த கலியுகத்தில் ஒன்றும் சாத்தியமில்லை" என்று முயற்சியற்றிருக்கிறோம். மேல் நாட்டாரோ கனவிலும் நினைக்காத ஆகாய விமானங்கள் என்ன, உலகத்தில் இருள் என்ற பதமே இல்லாமல் செய்து விடுவேன் என்று எங்கள் முன் கர்ஜித்துக்கொண்டிருக்கிற மின்சார சக்திகள் என்ன, இன்னும் கம்பியில்லா தந்திகள் என்ன, ரோசி யந்திரங்கள் என்ன, இன்னும் எத்தனையோ வியக்கத்தக்க விஷயங்களைக் கண்டுபிடித்து தங்களுடைய நாட்டுக்கு என்றுமழியாக் கீர்த்தியை உண்டுபண்ணி உலகில் தெய்வாம்சமாய் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒரு பைத்தியக்காரனும்கூட மறக்கமுடியாது. மேல்நாடெல்லாம் ஆராய்ச்சியினர்களால் தெய்வலோகம்போல் ஆக்கப்பட்டிருந்தும் கூட தங்கள் ஆராய்ச்சியை நிறுத்தாமல் இறந்தவர்களைஎப்படிஎழுப்புவதென்பதுபோன்ற அரிய பெரியவிஷயங்களிலும் இன்றும் ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கின்றார்கள் என்பது பிரத்தியட்சம்.

உலகத்தில் நாகரீகமடைந்த தேசங்களில் உள்ள ஒவ்வொருவருக்கும சராசரி வருடம் 900 முதல் 1100 ரூபாய் வருமானம் வர, நாள் ஒருதடவை அரை வயிற்றுக்கஞ்சிக்குக்கூடகாணாதவருமானமாகிய 35—40 கிடைக்கக்கூடிய இந்தியர்களில் பெரும்பாலோர் ஆராய்ச்சிசெய்யக்கூடிய தன்மையில் இல்லை என்பது நமக்குத்தெரியும். ஒரு சிலருக்கு கொஞ்சம் விசேஷமாக வருமானம் வந்தபோதிலும் அவர்களுடைய குடும்பத் தொல்லைகளினாலோ அல்லது வேறெவ்வித காரணங்களினாலோ ஆராய்ச்சிசெய்யும் தன்மை அவர்களிடமிருந்தும் அகன்று விடுகிறது. அப்படியானால் அதிலும் மிச்சமாக இருப்பவர்கள் ஊரார்சொத்துக்கு பிள்ளையாகப்பிறந்து வருஷம் ஒருதடவை ஒன்றுமறியா ஏழைமக்களிடம் வந்து பகல்கொள்ளையடித்துக் கொண்டுபோகும் லோககுரு பண்டார சன்னதிகளின் கோஷ்டியார்களே. அன்னவர்களுக்கு குடும்பத் தொல்லைகளோ உலக விவகாரங்களோ இருக்க ஞாயமே இல்லை. இவர்கள் ஏதாவது செய்திருக்கிறார்களா என்றுபார்த்தால் ஒன்றும் செய்திருப்பதாகசொல்வதற்கில்லை. ஒருகால் அப்பேர்ப்பட்ட காரியங்கள்செய்து இன்னும் முடிவுபெறாமல் ஆராய்ச்சியிலேயே இருக்கிறதோவென்று ஒருவாறு சந்தேகிக்கலாமென்றாலோ மிலேச்சர்கள் என்று இவர்களால் அழைக்கப்படுகிறவர்களுடைய அறிவில்படுகிற விஷயங்கள் இவர்களுடைய மூளைக்கு எட்டுவதில்லை.

**அற்பவிஷயங்களும்தங்களாலேயே நடக்கிறதென்று தங்களை பெருமைப்படுத்திக் கொள்ள விரும்பும் இந்த ஆசாமிகள் தங்களுடைய ஆராய்ச்சியினால் ஒரு நூதனவிஷயத்தை கண்டுபிடித்து விட்டார்களானால் காலினால்நடப்பதைவிட்டு தலையாலேநடந்து** வந்துநம்மிடம்உளறி கொட்டிவிடுவார்கள். அந்தோபாவம்! அவர்கள் மூளைக்கு ஒன்றும் எட்டவில்லைபோலும். ஆனால் இக்கூட்டத்தார், நாட்டில் மழைபெய்யாக் காரணத்தால் நூற்றுக்கு 90 பேர்கள் ஒருதடவை அரை வயிற்றுக்கஞ்சிக்குக்கூட வழியிலலாமலும் கால்நடைகளுக்கு தண்ணீர் தீனியில்லாமலும் கண்விழி பிதுங்கி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் பச்சைபல்லக்கில் ஏறிக்கொண்டு வந்து காலப்போக்கை யறியாமல் நம் ஏழைமக்களிடம் "நீங்கள் கடவுளை வணங்காததாலும் கடவுள் பிரதிநிதியான எமக்குசென்ற வருஷங்களில் சரியானகாணிக்கைகள் கொடாததாலும் மழைபெய்ய கடவுள் அநுக்ரகம் செய்யவில்லை" என்று பறைசாற்றுகிறார்கள். நமது ஏழைமக்களோ சுவாமிகளை சரியானபடி சம்ரக்ஷிக்காததோஷத்தாலேயே மழை பெய்யவில்லை என்று தங்களுடைய மூடநம்பிக்கையில் நம்பி தம் கைவசம்பணம்இல்லாதபோதிலும் 10—15 வட்டிக்கு தங்களருமைப் பெண்மணிகளின் நகைகளை அடகுவைத்து கடன் வாங்கி அந்தப் பரமதடியன்களுக்கு அழுது "நாங்கள்கொடுப்பதுசொற்பமாக இருந்தபோதிலும் அதைப் பத்து நூறு ஆயிரமாக பாவித்து அநுக்ரகம் செய்யவேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறார்கள். அந்த ஆசாமிகளும் சரியானவேட்டை அகப்பட்டதென்று மனதில் நினைத்துக்கொண்டு வெளிப்பார்வைக்கு அநுக்ரகம் செய்வதுபோல் பாவித்து வருஷம் ஒருதடவை கொள்ளையடித்துக் கொண்டுபோய் மடங்களில் தேவடியாள் சகிதம ராஜபோகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்மக்கள் மூடநம்பிக்கையைவிட்டு விஷயத்தை அறிவது எக்காலமோ.

ஒருசிலர் "நம் சுவாமிகள் சாதம் சாப்பிடுவதில்லை; பாலும் பழமும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்றுபெருமை பேசிக்கொள்கிறார்கள். அதன்மூலம் அவர். ஒன்றுப்சாதித்து விடுவதில்லை. ஒருபடிபாலை கால்படியாக காய்ச்சி சர்க்கரை,பதாமி, கிஸ்மிஸ் பழம்,தேன்,கல்கண்டு முதலியவைகளை போட்டுகால் நூறுபழங்களுடன் சாப்பிட்டு கொழுத்து சோம்பேறிகளாய் வாழ்கிறார்கள்.

பல்லக்குக் கொம்புபோல் நேராக (அ) நியாயமாகநடந்து கொண்டிருக்கிற இந்தச் சோம்பேறிகளுக்கு பணம் கொடுக்காததினால்,வானம் இடிந்து நம்மேல்விழுந்து விடாது. தற்சமயம் ஆப்கன் அரசராகிய அமானுல்லாஹான் அவர்கள்,மூடபழக்கவழக்கங்களை ஒன்றுமறியா ஏழைகளிடம் புகுத்துகிற மகமதிய குருமார்களை எல்லாம், அரஸ்ட்செய்து ஜெயிலில் போடுகிறார்கள். அதனால் அந்ததேசத்தில் இடி விழுந்து அன்னவரை கொன்றுவிடவுமில்லை, தேசம் அழிந்துவிடவுமில்லை. ஆனதால் மனிதனுக்கு சுயமரியாதை உணர்ச்சியை உண்டுபண்ணுகிற— "குடி அரசு" 'திராவிடன்' 'தமிழன்' முதலிய பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதுடன், மேல்நாட்டு சரித்திரங்களையும் வாங்கிப்படிப்போமானால் லோககுரு போன்ற மதத்து

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

சீர் திருத்தங்களைக் கண்டு

## சாஸ்திரிகள் புலம்பல்.

சோழவந்தான், முனகால திரு எஸ். பட்டாபிராமய்யா எழுதுவது.

"ஸ்வாமி தயானந்தரால், விளைந்த கேடுகள்"

1 திதி இல்லை யென்கிறார்!

பஞ்சாங்கக்காரர்களின் கதி என்ன? மற்றும் ஜீவதசையில் பிதுர் துரோகஞ்செய்து, இறந்தபின் கருமாதி சிரார்த்தங்கள் கோலாகலத்துடன் செய்து, பிரதிஷ்டை அடைவதெப்படி?

2 தீர்த்த ஸ்நானத்தால், பாபம் போகாதேன்கிறார்!

தீர்த்தவாசிகளின் பிழைப்புக்கு வழியென்ன? செய்யத்தகாத காரியங்களைச்செய்து சீக்கிரத்தில் எளிதாகப் பாபம் போக்குவதற்கு வேறு வழிதான் என்ன?

3 கோவில்களில் ஏதோ ஒரு விக்கிரஹத்தைக் கண்டு கும்பிட்டு விட்ட தினால் எங்கும் நிறைந்தகடவுள்வணக்கம் ஆகாதேன்கிறார்!

கோவிலிலுள்ள மூர்த்திகளில் கடவுளைப் பந்தனஞ்செய்து வைக்காவிட்டால், நாம் உல்லாசத்துடன் வாழவும், விழாக்கள் கொண்டாடவும் முடியுமா? இன்னும் தேவதாசிகளின் முறையும் மறையக்கூடுமே! கோவில் பூசாரிகளுக்கும், மற்றோருக்கும் இன்பவாழ்வு எப்படிக்கிட்டும்?

4 தீண்டாமையே கிடையாதேன்கிறார்!

தீண்டாமையெனும் வழக்கமில்லாவிடில், நம்மைக்கண்டு கூலிவேலை செய்பவர்கள் பயப்படுவார்களா? குறைந்த கூலிகொடுத்து அடிமைகளைப்போல் அதட்டி, அவர்களிடம் அதிகவேலை வாங்கமுடியுமா? தவிர இக்காலத்தில் மனிதர்களை விலைக்கு வாங்கமுடியுமா! அப்படி வாங்கிவிடினும், அவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையுங் கொடுத்துக் காப்பாற்றி வேலைகளை வாங்கினாலும் நமக்குக் கட்டுமா? மேலும், மிருகங்களைக்கொண்டு, மனிதர்கள் செய்யும் வேலைகளைச் செய்வித்துக்கொள்ள முடியுமா? இதற்காகத்தான் தீண்டாமை மட்டுமேயல்ல, நெருங்காமை என்னும் வழக்கத்தையும் வைத்துக்கொண்டால்தான் அவர்கள் ஒடுங்குவார்கள். நாய்களுடன் கொஞ்சிக் குலாவுகிறோம், அதனாற்றானே நாய்களினுங் கேடுகெட்டவர்களென்று தங்களை நினைத்துக் கொள்ளுகிறார்கள். அவ்வித எண்ணமில்லாவிடின் நமது காரியங்கள் ஒன்றும் நடக்காதல்லவா?

5 வேதங்களை வேதாங்கங்களுடன் வேற்றுமையன்னியில் எல்லோருங் கற்றறியவேண்டுமென்கிறார்!

அப்படியாயின், வேதங்களின் எழுத்து வாசனையே யறியாத வேதியர்கட்கு என்ன மரியாதை கிடைக்கும்? உண்மையான பிராமணர்கள் உற்பத்தியாகிவிட்டால், நம்மைப் போன்ற ஜாதிப்பிராமணர்கட்கு, அதோகதி கிட்டிவிடுமே? எல்லோரும் வேதத்தைக்கற்றுணர்ந்தால் வேதத்தில் அது இல்லை, இது இல்லை, அப்படிச்செய்யவேண்டும், இப்படிச் செய்யவேண்டும் என்று ஓர் பூகங்கிளம்பிவிடுமே? வேதத்தை எத்தனை நாட்கள் அத்யயனம் பண்ணுகிறது, வேதங்களை எத்தனை வருடங்களில் கற்றுக்கொள்கிறது, இதுவெல்லாம் வேலையற்ற வேலையல்லவா? (வீணான வேலை) பூணூலைப்போட்டு விட்டாலே, வேதாத்யயனந்தானே?

6 வர்ணம் ஜன்மத்தாலல்ல, சர்மத்தால் என்கிறார்!

ஐயோ! இதென்ன கலிகாலக்கொடுமை? உலகந் தலைகீழாகிவிட்டது? இதற்காகத்தான் வேத சாஸ்திரங்களைப் பிராமணர்கள் தவிர, மற்றவர் யாவருங்கற்றுணர்தல் கூடாதென எங்களின் சாஸ்திரங்களில், தேவதைகளும், ரிஷிகளும் சொல்லியிருக்கிறார்கள். சண்டாளக் கருமத்தை செய்தபோதிலும் பிராமணனென்று சொல்லப்படுவோர் வயிற்றிற் பிறந்தாற்றான் ஒருவன் பிராமணனாவான். எப்படியெனில், ஒரு சாஸ்திரமுந் தெரியாமல் சாஸ்திரியாவதில்லையா? அம்மாதிரி இதையும் ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது.

7 புராணங்களெல்லாம் பொய்யும், புழுகும் நிறைந்தவை என்கிறார்!

ஜகத்தே மித்யை, பிரம்மமே நான், என்பதும் தெரியாதா? அரிச்சந்திரன் பொய் சொல்லாது பட்டபாடென்ன? புராணங்களில்லாவிடில், நாடகமேடைகளில் நடிக்கக் கதைகளுக்கு நாம் எங்கேபோவது? புராண ராமாயணங்களைப் பாராயணஞ்செய்வோர் பிழைப்பில், மண்ணைப்போடவல்லவோ இப்படியெல்லாம் உளறுகிறார்?

8 பெண்களுக்குச் சம உரிமை உண்டேன்கிறார்!

அப்படியும் இப்படியுஞ் செப்பிக்கடைசியில் உரிமைக்கு வந்து விட்டார்? இப்பொழுதே இப்பாழும் பள்ளிகளில் பயின்ற மாணவிகள், கிழவர்களை மணம் புரியச் சம்மதிக்கிறதில்லையே. புருஷர்களைப் போல் அவர்களும் ஆய்விட்டால் எங்கள் புராணங்களைக் கேட்பதற்குக் கூட்டம் எப்படிக் கூடும், இவை எல்லாம், ரிஷி பஞ்சமி விரதங்களில் மண்ணைப்போடத்தானே? முன் காலத்திலோ கணவனிறந்துவிட்டால் உடன்கட்டை ஏறி ஸ்வர்க்கதிற்குப் போக ஓர் நேர்வழி உண்டு கணவனிறந்தவுடன் மனைவியை எரியும் நெருப்பிற்றள்ளி நாங்களுங் கொஞ்சம் புண்ணியஞ் சம்பாதித்துக்கொண்டுதானேயிருந்தோம். அதற்கென்றே சனிபோல் முளைத்தார் ராஜாராம மோகனராய். அரசாட்சியும் அவரை அங்கீகரித்து அந் நல் வழியையும் அடைத்துவிட்டது. பெண்களுக்கு ஆடவர்களைப்போல் சம உரிமை கொடுத்து விட்டால் தீண்டாமை யொழிதலில் மேல் ஜாதியாருக்கு விளையுங் கேடே ஆடவர்கட்குங் கிட்டுமென அறியாரோ? பெண்களையெல்லாங் கெடுப்பதற்கு இவ்வழி போலும்

9. கடவுளுக்கு அவதாரங்கள் கிடையாதேன்கிறார்!

வங்காமோ வழிக்கு. கன்னையா கம்பெனியின் தசாவதாரங்களைப் பார்த்தாவது தெரிந்துகொள்ளக்கூடாதா? கண்ணாற் கண்டபின்னராவது ஒப்புக்கொள்ள முடியாதா? நமது சாஸ்திரிகள் கூடவா ஓர் அவதாரமில்லை.

10. ஜோதிடத்தையும் மந்திரவாதத்தையும் புரட்டு என்கிறார்!

பொருத்தங்கள் பார்த்து நன் முகூர்த்தங்களில் தாலிகட்டும்போதே பல பெண்கள் விதவையாகி விடுகின்றார்கள். சோதிடர்களில்லாவிடிலோ, உலகிலே சுமங்கிலியில்லாது போய்விடும் என்பது அறியார்போலும். மந்திரவாதிகள் பேய் பிசாசுகளைக் கட்டிவைத்திருக்கிறதினாற்றான் இம்மட்டிலாவது சில பேர்கட்குமட்டும் பேய்பிடித்து நவராத்திரி தினத்தில் அம்மன் கோவில் சென்று ஆட்டி வைக்கிறார்கள். அவர்களில்லாவிடிலோ அவ்வளவுதான்? ஊரில் எல்லோருக்கும் பேய் பிடித்துத் தெருத் தெருவாய் நின்றாடவேண்டியதுதான்.

11. வேதங்களில் உயிர்வதை செய்து யாகஞ் செய்யச் சொல்லவில்லை என்கிறார்!

இதற்குத்தான் வேறு யாரும் வேதங்கற்றுக்கொள்ளக் கூடாதென்பது? வேதம் வாசிக்காமலே இது தெரியுமோ? வேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டுதானே யாகஞ் செய்கிறார்கள், பின்னர் உயிருடனேயே ஆட்டைத் தூக்கி நெருப்பிற் போட்டுவிடுவதா? வெகு அழகு? இப்படி யெல்லாஞ் செப்பவேண்டாம். எங்கள் சாஸ்திரிகளின் ஸ்வரூபத்தைக் காட்டினாற்றான் சும்மாவிருப்பீர் போலும்?

12. பிரஷ்டர்களைச்சுத்தி செய்து சேர்த்துக் கொள்ள வேண்டுமென்கிறார்!

சரி! சரி!! இப்பொழுதே பட்டணங்களில் ஏன்? கிராமங்களிலுங்கூட தீண்டாதார் கிட்டக்கிட்ட நெருங்குகிறார்கள். இப்பாழும் ரயிலொன்று இக்காலத்தில் வரவே, எல்லாம் நாசமாய்விட்டது? முன் காலத்தில் தூரமான பெண்கள் ஓர் பர்லாங்குக்குக் குறையாது ஓடி ஒளிவார்கள். அம்மட்டுமா? கணவனும் மனைவியும் நிமிர்ந்து நின்றுநேராகப் பேசமாட்டார்கள். தாசிவீட்டுக்குப்போனாலும் அவள் கண்ணெதிரே தீர்த்தம் சாப்பிடமாட்டார்கள். இப்பொழுதோ ஆசாரமென்பதே நசித்து வருகிறதே? பிரஷ்டன் பிரஷ்டன்தான். அவனுக்கு விமோசனமேகிடையாதென்று இவ்வளவு கண்டிப்பு இருக்கும்பொழுதே சிலர் ரெப்ரெஷ்மெண்ட் ரூமில் மறைவாகவந்து தாகசாந்தி செய்துவிடுகிறார்கள். நாம் செய்வதை ரகஸ்யமாய்ச் செய்துகொள்ளவேண்டியதுதான். ரகஸ்யம் வெளியாகி யாவராயினுங் கேட்பின், அவர்கட்குச் சமஸ்கிருதத்தில் ஓர் சுலோகத்தை அவிழ்த்துவிட்டால் வாயடைத்துப்போகிறது. அப்படியல்லாது நாம்பகிரங்கமாகச் சுத்திசெய்து சேர்த்துக்கொள்ளுவதென்றிருப்பின், இந் நிமிஷமே நம்மில் பாதிப்பேர்கள் மறைவில் சில சமயங்களிற் செய்யும் அனாசாரங்களை எல்லோரும் பயமில்லாது எந்தச் சமயத்திலுஞ் செய்துவிட்டுச் சுத்தி செய்து கொள்ளுகிறோம், சுத்தி செய்துகொள்ளுகிறோம் என்று கூக்குரலிடுவார்களே. அதற்கு என்ன செய்வது?

---

**சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்**

## 'குடி அரசு' பத்திராதிபர் அவர்களுக்கு.

அன்பார்ந்த ஐயா,

'குடி அரசின்' நோக்கமும் அதன்போக்கும் குறித்து என் கருத்தை வெளியிடுமாறு நண்பர் சிலர் தூண்டுவதால், நானிதனை எழுதலானேன். திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் செய்துவரும் பொது நலவேலைகளுக்குத் தமிழர்கள் மிகவும் கடப்பாடுடையவராவார். இந்தியமகாநாட்டின் (congress) சார்பாகவும், சுயஆட்சிக்கக்ஷியாரின் சார்பாகவும், காந்தியடிகளுக்குத் துணை நின்று ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொண்டு இவர் செய்த வேலைகளும் காட்டிய வீரமும் தமிழகமறிந்த செய்தி. கேவலம் ஜாதி மத வெறுப்புடைமை இவரது இயல்பில்லை என்பதும், மனமறிந்த அறநியமங்களைக் கடைப்பிடித்து அஞ்சாமலுண்மையுரைத்துச் சமுதாய சேவை ஆற்றுவதே இவருவப்பதாகும் என்பதும், அந்தணரல்லாதாரியக்க ஆரம்பத்தில் அவ்வியக்கத்தவர்களைக் கண்ணோட்டமின்றிக் கண்டித்த திரு சத்தியமூர்த்தி அவர்கள் திரு. இராஜகோபாலாச்சாரி அவர்கள் போன்ற அந்தணர்களுடன் ஒத்துழைத்து வந்த நாயக்கரவர்களின் முன் நடப்புக்களாற் றெளிவாகும். முன் ஒத்துழையா அரசியற் கட்சியின் சார்பாக அந்தணரல்லாதாரியக்கத்தை இவர்கள் கண்டித்த கடுமையைக் கருதுவோருக்குத் தற்காலம் சுயமரியாதை இயக்கத்திற்குத் துணை நின்று அதை வெறுக்கும் பார்ப்பனர்பால் இவர்கள் காட்டிவருங் கடுமை வியப்பைத்தருவதற்கு நியாயமில்லை.

பொய்யாமல் தன்னெஞ்சறிந்த நியாயத்துறைகளில் எதிர்ப்போரை இரக்கமின்றி எதிர்த்துமோதி, நடுநிலையறிவோடு சமுதாய மக்களுட் சமவுரிமைக் கடமைகளை வற்புறுத்தி, சுயமரியாதையுணர்வைத் தமிழர் நெஞ்சில் ஊன்றித் தடிக்கச் செய்யும் முயற்சி மேற்கொண்டுள்ள நாயக்கரவர்கள், அம்முயற்சிக்கிடை நிற்பவரை ஈரமின்றித் தாக்குவதியல்பேயாகும்.

தற்காலத் தமிழ்நாடு ஜாதிச் சமயச்சண்டைகளால் நிலையழிந்து வருந்துவது தேசாபிமானிகளனைவருக்கும் பெருவருத்தமுண்டுபண்ணுவதில் ஐயமில்லை. சாமிகளின் பேராலும் சமயத்தின் சார்பாயும் பலர் தமிழ்ச்சமுதாயத்துக்குப் பெருந்தீங்கு புரிந்து வருவதைக் காணுந்தோறும், நம்மவர்க்கு நற்கால விடுதலைகள் விடிவதுண்டோ என்ற அச்சமே பிறக்கின்றது. இத்தருவாயில், உண்மையை உள்ளபடி பேசி, நம்மை நாம் திருத்திமுன்னேறும் நன்முயற்சி மேற்கொள்ளாமல் இன்னுங்காலந்தாழ்ப்பது தேசாபிமானமா, சமுதாய சேவையா, தன்னலமாக்குமுறையா? நமது குறைகளை நாமுதலுணர்ந்தாலன்றித் திருந்த வழி யேற்படாது. குறைவுகளை அச்சம் அவமானமின்றி எடுத்துக்காட்டி, நமக்கு நலமிடித்துரைக்கும் நட்புடையாரே தற்காலம் தலைவராதல் தகவுமிகவுடையதாகும். நடுநிலை நின்றாராய்ந்து உண்மைகளை உரைப்பதுவும், உண்மை விளக்கு நோக்கமுடையோர் உரைகளுக்கு இடம் தருவதுவுமான நாயக்கரவர்களின் 'குடி அரசுக்கும்' நாயக்கரவர்களுக்கும் நல்வரவு கூறத் தமிழகம் கடமைப்பட்டுளது. உரைநடையில் சொற்களின் கடுமையைச் சிறிது குறைக்கும்படி என்போல்வார் விரும்பலாம். ஆனால் உண்மையை உள்ளவாறுரைப்பதில் கண்ணோட்டம் நலந்தராது. அஞ்சா நெஞ்சமே யாக்கந்தரும் என்பதில் நான் அழுத்தமான நம்பிக்கையுடையவன். வழக்குத்துறையில் கண்ணோடி உண்மைகளைமறைப்பினுங் குறைப்பினுங் கெடுதிவிளையும். வாதமுறையில் நீதிகூறித் தங்கோள் மறுப்பவர்களை நாயக்கரவர்களும் 'குடி அரசு'ப்பத்திரிகையும் வரவேற்பதன்றி வெறுப்பதில்லையென்று நான் நன்கறிவேன். அறம் பொய்த்து தன்னலம்பேணுபவர் பொய் வாதங்களைமட்டுமே இரக்கமின்றி நாயக்கரவர்கள் அலைத்துக்குலைக்க ஆர்வமுறுகின்றனர்.

பெரும்பாலும் தங்கள் கொள்கைகளில் அநுதாபமில்லாத தமிழர்களிருப்பதருமை. இத்தகையார் பலரின்னுந் தமிழகத்தில் இருத்தல்வேண்டும் என்ற விருப்பம் நான் மிக்குடையேன். எனில், தேசியப் பொது இயக்கங்களில் நாயக்கரவர்களின் தற்கால கருத்துக்கள் சிலவற்றில் மாறுபாடுமுடையேன். சுயமரியாதை இயக்க முற்றுப்பெறுமளவும் சுயஆட்சி இயக்க முயற்சிகளை முற்றிலும் வெறுக்க வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. சுயஆட்சி சமுதாயப் பொது நலவளர்ச்சிக்கு இன்றியமையாதது. சுயமரியாதையும் சுயஆட்சி பெறுவதற்கு இன்றியமையாததேயாம். இரண்டும் தம்முள் மாறுபாடுடையவல்ல; ஒத்துடனியங்க வேண்டுவன என்பதே என் கருத்து. சுயமரியாதை இயக்கமும் சுயஆட்சி இயக்கமும் கைகலந்தால், நமது சமுதாய முன்னேற்ற முயற்சி விரைவில் பயன்தருவதாகும். அதுமட்டுமல்ல; அரசியற்றிருத்த முயற்சிகளில் சுயமரியாதை இயக்கத்தார் கலவாமல் விலகுவதால், இவ்விரு இயக்கங்களும் வலிகுறைந்து நலிவடைகின்றன. இயற்கையில் முரணற்ற இடத்தில், நாயக்கரவர்கள் தற்போது வன்கண்மை காட்டுவதற்காக மட்டும் நான் சிறிது கவலுகின்றேன். இவர்களனைய வீரர்களும் துணைநிற்பின், அரசியற்றிருத்தமுறைப் போரில் நம்மவர் வெற்றிவிரைந்து பெறலாம். பெருந்திருத்தங்களும் சுயமரியாதையுடையவாகும். அந்நிய ஆதிக்கத்தை வெறுக்கொணா அடிமை நெஞ்சில் சுயமரியாதை உணர்ச்சியும வேரூன்றித்தழைவதருமை. அரசியற்றுறையில் அடிமைநிலைகளையு முயற்சியைத் தாழ்ப்பது நமக்கு நலந்தராது. காலப்போக்கிலது அமைவதுமன்றும். ஆகவே சமயம் சாதித்துறைகளில் அடிமைத்தன்மையை அறவே வெறுப்பது போலவே, அரசியற்றுறையிலும் அடிமைத்தளத்தை அழிக்கவும் விரும்ப வேண்டும். அடிமைநிலை எத்துறைகளிலும் எப்போதும் எல்லாருக்கும் தீமையன்றி நன்மை பயவாது. சமுதாயப் பொதுநலம் விரும்பும் தேசாபிமானிகள் அனைவரும் எத்துறையிலும் அடிமைநிலையை அறவே களைந்தெறிவதில் அனவரதங் கண்ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும். யாண்டும் எஞ்ஞான்றும் பொய்மைகளை வெளியாக்கி உண்மையினுறுதியைநம்மவருக்கு வற்புறுத்தி வளர்ப்பதில் ஆர்வமும் அஞ்சாத் தறுகண்மையும் நந்தலைவர்பால் தளராது வளர்தல் வேண்டும். எனில், நம்மக்கள் நலமே நாம் விரும்புவதால், கடுஞ் சொல்லால் நம்முள் நாம் பகைமையினை வளர்க்காமல், மெய்த்துறையில் நம்மவர் தம் ஒற்றுமையை வளர்த்தல் வேண்டும். இதுவே என் கருத்தாகும்.

முன் நாயக்கரவர்கள் சுயஆட்சித்துறையில் முன்னின்றாக்கிய முயற்சிகளைப்பிறர் பலர் மேற்கொண்டு நடத்துவதாலும், சுயமரியாதை உணர்ச்சியை தமிழருக் கூட்டுபவரில்லாத வுலகினிலே அதன் முயற்சியை முழுவலியோடும் நடத்துவதற்கு நாயக்கரவர்களே தக்க தலைவராயமைந்திருப்பதாலும், இவர்களை அரசியற்றுறையினின்னும் உழைத்தலுக்க வேண்டவில்லேன். இவர்களின் சுயமரியாதை இயக்கம் தமிழரையும் தமிழகத்தையும் தலைநிமிர்த்து வளமடைவாழச் செய்யவேண்டுமென்பதில் நடுநிலையாளருள் இரண்டுபட்ட அபிப்பிராயமேற்படாது. "குடியரசும்" நாயக்கரவர்களும் இன்னும் பல்லாண்டினிதிருந்து பெருநலம் நமக்கு வளர்த்திடுக.

சோமசுந்தரபாரதி.


---

## 'பார்ப்பனரல்லா இளைஞர்.'

"பார்ப்பனரல்லா இளைஞர்" (The Non" Brahmin Youth) என்ற ஜூன் ஜூலை மாதத்திய ஆங்கிலமாதசஞ்சிகை ஒன்றுவரப் பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. எஸ். பி. ஒய் சுரேந்திரநாத் வோகளி ஆர்யா எம். ஏ. பி. டி. எஸ். டி. எம். அவர்களை சமூகராஜீய உலகத்தினருக்கு அறிமுகப் படுத்தவேண்டியதில்லை. அவர் கசடறக்கற்றவர், கற்றபடி நிற்பவர், நின்றபடி சொல்பவர். இவரது சஞ்சிகை பார்ப்பனரல்லா இளைஞருக்கேயன்றி பெண்களுக்கும் மாணவமாணவிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஆராய்ச்சியாளருக்கும் பயன்படுமாறு பெண்கள் சுதந்திரம், வைத்யம், சிற்பம், முதலாளி தொழிலாளி பிரிசினை, சமூக சமய ராஜீய சீர்திருத்தம் முதலியவைகளைப் பற்றிய கட்டுரைகளும் செய்யுள்களும் கொண்டுகவர்த்தனங்களென ஒன்பது தலைப்பின் கீழ் விளங்குகின்றது. முகப்பில் பார்ப்பனரல்லாப் பெரியார்களின் ஆப்டோன் படங்களும் இடையிடையே விஷயத்தை ஒட்டிய படங்களும் கண்களைக் கவர்கின்றன.

சஞ்சிகையானது ராயல் 1/8 அளவில் 80 பக்கங்கள் கொண்டதாய் தடித்த தாள்களில் சுத்தமான ஆங்கில எழுத்தும் நடையும் கொண்டதாய் இருக்கிறது. வருட சந்தா ரூபாய் 3—8—0 தான். மாணவமாணவிகளும், சமய சமூக ராஜீய சீர்திருத்தக்காரர்களும் இச்சஞ்சிகையை வரவழைத்துப் படிப்பார்களாயின் பெரும் பயனடைவார்களென்பது திண்ணம். விலாசம்:—

ஆசிரியர், 'பார்ப்பனரல்லா இளைஞர்'
20, மில்லர் ரோட், கீழ்பாக்கம், மதராஸ்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-௵ புரட்டாசி ௴ 15-௳

# சமயம்.

சமயம் என்பதைப்பற்றி இவ்வாரம் ஒரு நீண்ட வியாசம் எழுதவேண்டிய அவா ஏற்பட்டதின் காரணம் என்னவென்பதை முதலில் குறிப்பிட்டு விட்டு பின்னால் சமயத்தைப்பற்றி எழுதுவோம். இது சமயம் சமயத்தைக்காப்பாற்ற புறப்பட்டிருப்பதாக சிலர் திடீரென்று வெளிவந்து பெரிய ஆர்ப்பாட்டம் செய்து பாமரமக்களின் அறியாமையை தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக்கொண்டு பத்திரிகைகள் மூலமாகவும் துண்டுபிரசுரங்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் விஷமப்பிரசாரம் செய்துவருவதோடு சமயத்திற்குத் தாங்கள் அதிகமாய் பேசிக்கொண்டும் யோக்கியப் பொறுப்பற்ற முறையில் நமது முயற்சிக்கு இடையூறு விளைவிப்பதெனவே முடிவு கட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

இக்கூட்டத்தார் யாவர் என சிலராவது அறியவிரும்பலாம். இக்கூட்டத்தவருள் பெரும்பாலோர் சமயத்திற்கென ஒரு சிறிது நேரமோ ஒரு தம்மன்காசோ செலவழிக்காத "தியாகிகளும்" அதுமாத்திரமல்லாமல் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும் பணம் சம்பாதிக்கும் தொழிலுக்கும் இந்த விஷமப் பிரசாரத்தொழிலைத்தவிர வேறு ஒரு மார்க்கமும் அடியோடு இல்லாதவர்களும் என்றே சொல்லலாம். இக்கூட்டத்தார், கோர்ட்டு விவகாரங்களில் நீதியை எடுத்துச் சொல்லுவதற்கு என்று ஏற்பட்டிருக்கும் நியாயவாதிகள் எனப்படும் வக்கீல்களின் நாணயம் எவ்வளவோ அதைவிட மோசமான யோக்கியதையுடையவர்கள் என்றே சொல்லவேண்டும். அதாவது வக்கீல்களுக்கு அவர்கள் எடுத்துச்சொல்லும் வாதத்தில் எவ்வளவு மனச்சாக்ஷி உண்டோ அதை விட மோசமான மனசாக்ஷியும வக்கீல்களுக்கு அந்த வாதங்களில் எவ்வளவு கவலை (தங்களது வரும்படியைப் பொருத்தவரையில் மாத்திரம்) உண்டோ அதைவிட மோசமான (பிரசங்கம் நடக்கவேண்டிய அளவையும் பத்திரிகை செலவாகும் அளவையும் புஸ்தகம் விற்கும் அளவையும் பொருத்தவரையில் மாத்திரம்) கவலை உடையவர்கள் என்றே சொல்லலாம். இதற்கு உதாரணம் நாம் காட்டித் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்பதே நமதபிப்பிராயம். ஆனாலும் சில பத்திரிக்கைக்காரர்களையும் சில பண்டிதர்களையும் சில புஸ்தகக் கடைக்காரர்களையும் ஞாபகப்படுத்திக்கொண்டால் இதன் யோக்கியதை தானாகவே விளங்கிவிடும்.

அதாவது, எப்படி தேசியத்தைப்பற்றி தேசத்தின் பேரால் வாழ்வு நடத்துகிறவர்களும் வயிறு வளர்க்கிறவர்களும் தங்களைத் தவிர மற்றவர்களுடைய அபிப்பிராயத்தை பலனற்றது என்றும் தேசத்துரோகமானதென்றும் சொல்லவேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்களோ அதுபோலவே இந்தசமயத்தின் பேரால் வாழ்வு நடத்துகிறவர்களும் வயிறு வளர்க்கின்றவர்களும் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தவிர மற்ற அபிப்பிராயங்கள் சரியானதல்லவென்றும் மதவிரோதமானதென்றும் நாஸ்திகமென்றும் சொல்லவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

அப்படி இருப்பதிலும் அவாளவாளமக்கள் ஏமாறும்படி பேசுவதும் எழுதுவதுமாயிருக்கின்றார்களேயொழிய விவகாரத்தை எதிர்ப்பதில் தக்க சமாதானம் சொல்லி தங்களது கக்ஷியை நிலைநிறுத்த வழிதேடுகிறவர்களாகவும் இல்லை. அன்றியும் இக்கூட்டத்தவர்களின் மனப்பான்மையையும் வாழ்க்கையையும் அறிந்தவர்களுக்கு இவர்களது வார்த்தைக்கும் எழுத்துக்கும், மனப்பான்மைக்கும் வாழ்க்கைக்கும் எதாவது சம்பந்த முண்டா என்பதை ஒருவாறு அறியலாம். அது எப்படியோ இருந்து போகட்டுமென்றாலும் இதுபோது சைவமும் வைணவமும சமயாச்சாரிகளும் மக்களுக்கு எதற்காகவேண்டும் என்பதைப்பற்றி சற்று யோசித்துப் பார்க்கும்படி பொதுமக்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். தேசமோ மக்களோ முன்னேற்றமடைய வேண்டுமானால் அறிவும் சையன்ஸ் என்று சொல்லும்படியான விஞ்ஞான தத்துவமும் ஒழுக்கமும் முன்னேற்றமடைந்தாகவேண்டும் என்பதை ஒவ்வொருவரும் முதலில் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் இவைகளில் முன்னேற்றமடைந்த தேசமும் மக்களுந்தான் இதுவரை உண்மையில் முன்னேறி வந்திருக்கின்றார்கள்; வந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை வாசகர்கள் நாம் சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டியதில்லை. தெரிய வேண்டிய அவசியமிருக்குமானால் இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளை சற்று ஞாபகப்படுத்திப் பார்த்தால் தானாக விளங்கும். எனவே மேல்கண்ட அறிவு ஆற்றல் ஒழுக்கம் ஆகியவைகளுக்கு ஏற்றதாக நமது மதமோ மதாச்சாரியார்களோ அல்லது சாமிகளோ இருக்கின்றனவா என்பதை தனியே இருந்து பாரபக்ஷம் விருப்பு வெறுப்பு இல்லாமல் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

நமது மதமென்பதோ வேதமென்பதோ சாமிகள் என்பதோ சமீப காலத்தில் ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை. யுகம் சதுர்யுகம் மகாயுகம் கற்பம் என்பவைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு சரித்திர ஆராய்ச்சிப்படி பார்த்தாலும் 5000, 6000 வருஷ காலத்திற்கு குறையாதது என்று சொல்ல இடமிருக்கின்றதென்பதில் ஆராய்ச்சிக்காரர்களுக்குள் அதிகமான அபிப்பிராயபேதமில்லை. உலகத்தில் தோன்றி இப்போது ஜீவனுடனிருக்கும் மற்ற சமயங்கள் எல்லாம் அதைவிடக்குறைந்த காலத்தைக் கொண்டதாகவே இருப்பதுடன் அந்த நாடுகள் தலைசிறந்து விளங்குகின்றது. அப்படி இருக்க நம் தேசம் மாத்திரம் இந்நிலையில் இருக்கக் காரணமென்ன என்பதற்கு மேல்கண்ட சமய வாதிகள் என்ன பதில் சொல்கின்றார்கள்?

இதற்காக அரசாங்கத்தைப்பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லி அரசாங்கத்தை வைதுவிட்டால் அதுவே போதுமான சமாதானமாகுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் சமயத்தையே ஆதாரமாகக் கொண்ட ராமன், கிருஷ்ணன் போன்ற விஷ்ணு அவதார அரசர்களும், மீருகுதி சொக்கலிங்கர் போன்ற சிவ அவதார அரசர்களும், மற்றும் சேரன், சோழன், பாண்டியன் போன்ற தெய்வத்தன்மை தாண்டவமாடிய அரசர்களும் ஆண்ட காலத்தைவிட இப்போதைய அரசாங்கமோ அல்லது ஜனப்பிரதிநிதி அரசாங்கமோ எந்த விதத்தில் மோசமானது என்பதற்கு எதாவது ஒரு குறிப்பிட்ட சிறு உதாரணம் சொல்லக்கூடுமா என்று கேட்கின்றோம்.

அனேக ஆசிரிக்கனக்கான வருஷங்களாக மக்களின் நிலை குறைந்து வருவதையும் தேசம் அடிமைப்பட்டு வருவதையும் தொடர்ச்சியாக கேட்டும் பார்த்தும் வந்தும் கொஞ்சமாவது அறிவு என்பதை உபயோகப்படுத்தி இதன் காரணங்கள் என்ன என்பதை கவனிக்காமலும் அக்கம் பக்கம் எப்படி இருக்கின்றது என்பதை ஒரு சிறிதும் திரும்பிப் பாராமலும் மக்களை பழைய சமயம் சமயாச்சாரி சாமி என்பதையே குரங்குப் பிடியாய் பிடித்துக்கொண்டே நாசமாய்ப் போகும்படி செய்வதால் யாருக்கு என்ன நன்மை விளையக்கூடும் என்று கேட்கின்றோம்.

சாமியின் மூலமும் சமையத்தின் மூலமும் சமையாசாரிகளின் நடத்தையின் மூலமும் மக்களுக்கு ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலத்தையும் கற்பிக்கலாம் என்று யாராவது சொல்ல வருவார்களேயானால் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு நேரே ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலன்களையும் கற்பிப்பதால் என்ன நஷ்டம் விளைந்துவிடக் கூடும் என்று கேட்கின்றோம்.

இதுகால பரியந்தம் அதாவது குறைந்தது 5000 ௵ காலம் இந்த வேலையைச் செய்து பார்த்தாய் விட்டதல்லவா? இனி ஏன் புதுமுறை கண்டு பிடிக்கக் கூடாது. சாதாரணமாக வைத்தியசிகிச்சையில், வியாதிக்கு தக்க மருந்தை இரைப்பைக்கு அனுப்பி அங்கு அது ஜீரணக் கருவிமூலம் ஜீரணிக்கச்செய்து சக்கையை மலத்தின்மூலம் கழித்து சத்தை ரத்தத்தோடு கலரும்படி செய்து வியாதியைக் குணமாக்க முயற்சிப்பதைவிட மருந்தின் உண்மையான சத்தை எடுத்து நேரே ரத்தத்தில் சேர்த்து வேலை செய்யும்படி (இன்ஜெக்ஷன்) செய்வதுபோல ஒழுக்கங்களையே கற்பிப்பதில் என்ன நஷ்டம் என்று கேட்கின்றோம். ஒரு சமயம் அந்த தொழில் பழகாத சில வைத்தியர்களுக்கு

வேறு தொழில் கற்றுக்கொள்ளும் வரையில் வயிற்றுப் பிழைப்புக்கு கஷ்டமாயிருக்கலாம். இதற்காக மக்கள் வியாதியோடு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதா என்பதை யோசித்துப் பார்த்தால் சிலரது வயிற்றுப் பிழைப்புக்கஷ்டம் அவ்வளவு பெரிதாகத் தோன்றாது. நிற்க.

பொது ஜனங்களில் சிலர் இக்கூட்டத்தினர்களின் யோக்கியதையையும் உண்மையையும் அறியாமல், நாம் ஏதோ சற்று அளவுக்கு மீறி சற்று வேகமாய்ப் போவதாக கருதுகிறார்கள் போல் தெரிய வருகின்றது. ஆனால் அவர்கள் அப்படி கருதுவதற்கு ஆதாரமோ நியாயமோ ஒன்றும் எடுத்துக் காட்டாமல் "இருந்தாலும் இவ்வளவு கடினமாக போகலாமா" என்கின்ற ஒரே பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆதினால்தான் நாமும் அவற்றை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்வதில்லை. ஏனெனில் நேற்று வரை அமிதவாதிகளாக இருந்தவர்கள் அந்தக் கொள்கையுடனேயே நம்மால் மிதவாதிகள் என்று சொல்லப்படுபவர்களாகி விட்டார்கள். காரணம் என்னவென்றால் நாம் அவர்களைவிட சற்று வேகமாய்ப் போவதாக ஜனங்கள் நினைப்பதுதான்.

இதே முறையில் வெகு சீக்கிரத்தில் நாமும் மிதவாதிகள் என்று கருதப்படக்கூடியவர்களாக ஆனாலும் ஆகலாம் என்பதே நமது முடிவு.

நம்மைவிட வேகமாகப் போகக்கூடிய வாலிபர்கள் முளைப்பதை வளருவதை நாம் நேரிலேயே பார்க்கின்றோம்.

ஆனாலும் எவ்வளவு கொடுமையை அனுபவித்தாலும் பலாத்காரம் என்றால் இன்னமும் நமக்கு கஷ்டமாகத்தான் இருக்கின்றது. நியாயத்தையும் வாதத்தையும் எடுத்துச்சொல்லி மெய்ப்பித்து பார்க்கலாம். முடியாவிட்டால் இன்னமும் பொறுக்கலாம் என்கின்ற எண்ணமே தோன்றுகின்றது.

ஆனால் நமது இளவல்களுக்கோ "இன்னமும் எத்தனை நாளைக்கு இந்தப் புரட்டுகளுக்கும், பித்தலாட்டங்களுக்கும், சுயநலத்திற்கும கொடுமைகளுக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருப்பது, இரண்டில் ஒன்று பார்க்க வேண்டியதுதான்" என்கின்ற துடிதுடிப்பு கொழுந்து விட்டெழுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் காலத்தில் நாம் அவர்களால் மாத்திரமல்லாமல் பொதுமக்களாலும் மிதவாதிகள் என்றும பழம்பிடுங்கல்கள் என்றும் குற்றம் சொல்லப்படுவோம் என்கின்ற உறுதி நமக்குண்டு. எனவே இவ்விஷயத்தில் அதிகமாகப் போவதும் நிதானமாகப் போவதும அவரவர்கள் மனஉணர்ச்சியைப் பொருத்ததே தவிர வேறல்ல.

உதாரணமாக பண்டிதர் திரு. வேதாசலம் அவர்கள் ராயபேட்டையில் காந்தி நிலைய ஆண்டுவிழா தலைமைச்சொற்பொழிவில் அவர் நிகழ்த்தியதாக காணப்பட்டவைகளில் ஒன்று "சைவத்தை குற்றம் சொல்பவனை இன்னமும் விட்டுவைத்திருக்கின்றீர்களா? உங்கள் சரீரத்தில சைவரத்தம் ஓடவில்லையா?" என்பதாகச் சொன்னதாக காணப்பட்டது. (அது ஒருவாறு மறுக்கப்பட்டது) அவர் அப்படியே சொன்னதாக வைத்துக்கொண்டாலும் அது சட்டப்படி குற்றம் என்றுசொன்னால் சொல்லலாமே ஒழிய அவரது உணர்ச்சிப்படி அது எப்படிக் குற்றமாகும்.

ஒரு சமயம் அதிலிருந்து பண்டிதர் சரீரத்தில் சைவ ரத்தம் ஓடுகிறது இல்லையா என்கின்ற கேள்வி வேண்டுமானால் கேட்கலாமே ஒழிய அவ்வுணர்ச்சி மக்களுக்கு தோன்றுவது இயல்பு என்பதே நமதபிப்பிராயம். தற்கால நிலையில் இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்கள் அமிதமாக அதாவது மிக்க வேகமாக சிலருக்கு பட்டால் படலாம். அதற்காக மக்களின் உணர்ச்சி காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது அவ்வளவும் பயனளிக்காதென்றே சொல்லுவோம்.

மக்களின் சுதந்திரத்திற்கும் அறிவிற்கும் சுயமரியாதைக்கும் உலகம் போகின்ற போக்கில் நாம் இருக்கும் நிலை எவ்வளவு பிற்பட்டது என்பதையும் நமது போக்கு எவ்வளவு அசைவற்றதும் நிதானமுமானது என்பதையும் யாரவது கவலையுடன் சிந்தித்துப் பார்த்தால், நமக்கு கவலை இருந்தாலும் மதமும் சாமியும் மத ஆச்சாரிகளும் அவர்கள் கதைகளும் நம்மை ஒரு சிறிதும் கடைப்படுத்தவே மாட்டாது என்றே துணிந்து சொல்லுவோம். ஆனால் அவற்றில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் தங்கள் வாழ்வும அறிவுமே பிரதானம் என்பவர்களுக்கு உலகம் தெரியாதென்றுதான் சொல்ல வேண்டும்.

ஆகவே பொது மக்கள் இனித்தான் சற்று ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

## பழியோரிடம் பாவமோரிடம்.

காலஞ்சென்ற தமிழ் தேசிய கவி சுப்ரமண்ய பாரதியவர்களின் தேசிய நூல்களின் முதலிரண்டு பாகங்களை சென்னை அரசாங்கத்தார் அராஜகநூல்களென்று பறிமுதல் செய்திருப்பதாகத்தெரிகிறது. அந்நூல்கள் பறிமுதல் செய்யப்படுவதற்கு காரணம் ஜஸ்டிஸ் கட்சியார்தான் என்று "தமிழ்நாடு" பத்திரிகை ஜஸ்டிஸ்கட்சியார்மீது வீண்பழி சுமத்துகிறது. சென்னை அரசாங்கத்தார் மேற்படி நூல்களை பறிமுதல செய்வதற்கு முன்னமே பர்மா அரசாங்கத்தார் பறிமுதல் செய்தனரே அதற்கு யார்காரணம என்று 'தமிழ்நாடு' கூறுமா? பர்மா அரசாங்கம் பறிமுதலசெய்த புஸ்தகத்தை சென்னைகவர்மெண்டாரும் பறிமுதல்செய்ய வேண்டும்என்ற ஒரு அரசாங்கமுறை இருந்துவருவதால் மேற்படி நூல்களை சென்னையில் பறிமுதல் செய்ததற்கு பர்மா கவர்மெண்டார் தான் காரணம் என்று சுதேசமித்திரன் பத்திரிகையும் கூட சொல்லியிருக்கிறது. ஆகவே இந்த பறிமுதலுக்கு ஜஸ்டிஸ் கக்ஷியார் எந்த விதத்திலும் காரணமாயிருக்க வில்லை.

பறிமுதல் செய்யப்பட்ட மேற்படி ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரின் நூல்களில் ராஜீயத்தைவிட பார்ப்பனீயமே மிகக் கடுமையாகக் கண்டிக்கப் பட்டிருப்பதால் அவை பறிமுதல் செய்யப்பட்டதற்கு யார் காரணமாயிருந்திருக்கலாம் என்பதை அறிந்தும் அறியாதது போல் ஜஸ்டிஸ் கட்சியாரை "தமிழ்நாடு" தாக்குவதைப் பார்த்தால் அதைக் "கோடாரிக்காம்பு" என்று சொல்லுவதா அல்லது பழியோரிடம் இருக்க பாவத்தையோரிடம் சுமத்துகிறதென்பதா?

## திரு. கிஞ்சப்ப கவுண்டர் மரணசாசனம்.

## (ஒயில்)

காலஞ்சென்ற புளியம்பட்டி திரு. கிஞ்சப்பகவுண்டர் அவர்கள் தமது சொத்துக்களைப்பற்றி 1924-வரு. டிசம்பர் மாதம் ஒரு ஒயில் எழுதி ஈரோடு ரிஜிஸ்ட்டர் ஆபீசில் ஆஜர்படுத்தி தமது ஜீவியகாலத்திற்குபின் வெளியாக்கும்படி சீல் செய்து வைத்திருந்தார். அதை அவர் கொலையுண்டபின் வெளிப்படுத்தச்செய்து நகல் வாங்கியதில் அதில் அடியில்கண்டபடி எழுதப்பட்டிருந்தது.

தாம் வளர்த்துவரும் ஒரு பெண் குழந்தைக்கு தமது லேவாதேவிப் பணத்திலிருந்து (ரூ.10,000) பதினாயிரம் ரூபாயும், ஒரு தேசிய பள்ளிக்கூடத்திற்கு (ரு. 20,000) இருபது ஆயிரம்ரூபாயும் ஒக்கிலியர்பிள்ளைகள் படிப்புக்காக (ரூ 30,000) முப்பது ஆயிரம் ரூபாயும், கோவில் பூஜை பஜனைக்கு (ரூ.5000) ஐயாயிரம் ரூபாயும், புளியம்பட்டி கிராமத்தில் 2 3/4 ஏக்கர் நஞ்சையும்.

தமது திரு[illegible] ஏழைகளுக்கு சோறுபோட (ரூ. 3000) மூவாயிரம் ரூபாயும், தமது பிரியமான வேலைக்காரரான நிம்மப்பகவுண்டர் மகன் குள்ளப்பகவுண்டருக்கு (2000 ரு) இரண்டாயிரம் ரூபாய் ரொக்கமும் புஞ்சை [illegible]பாளையத்தில் (205 சி) சர்வே எ-1 டி-19 355, 279, 282, நெம்பர் புஞ்சை காடுகளும்,

தமது சம்சாரத்திற்கு ஆயுள் பரியந்தம் அனுபவிப்பதற்கு மட்டும் ந. பு. கிராமத்தில் 210 செ. நஞ்சை பூமியில் சுமார் 2 ஏக்கராவும் தமது பிரியமாயிருக்க நிம்மக்காளுக்கு ஆயுள்பரியந்தம் அனுபவிக்க மாத்திரம் கொண்டையம்பாளையத்தில் உள்ள நஞ்சை பூமியும் ஆர்வதி சின்னக்காள் வீடு என்கின்ற வீடும், கருப்ப முதலிமகன் சென்னி முதலி என்கின்ற மற்றொருவேலைக்காரருக்கு அவர் ஆயுள் பரியந்தம் 2000 ரூபாயின் வட்டியும் கொடுத்துவிட வேண்டியது. மீதியுள்ள சொத்துக்களையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் காலஞ் சென்றால் அச்சொத்துக்களையும் பங்களாபுதூர் ஒன்னப்பகவுண்டரும் அவர் மகன் நடராஜ கவுண்டரும் அனுபவிக்கவேண்டியது என்பதாகவும் இவைகளையெல்லாம் நடத்த திருவாளர்கள் ந. புளியம்பட்டி K. மாஸ்தக் கவுண்டர், சி. கருத்திரும கவுண்டர், பங்களாப்புதூர் ஒன்னப்ப கவுண்டர் ஆகியவர்களை நியமித்திருப்பதாகவும் எழுதி வைத்திருக்கின்றார். இது சுமார் 4 வருஷத்திற்கு முன எழுதப்பட்டது.

### திரு. நாயக்கர்

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் 29-9-28 தேதி ஈரோட்டைச் சார்ந்த சூரம்பட்டிக்கு சுயமரியாதைச் சங்கத் திறப்புவிழா நடத்தவும் 30-தேதி யன்று கோபிக்கு சுயமரியாதைப் பிரசாரம் செய்யவும் திரு. எஸ். ராமநாதன் அவர்களுடன் செல்கிறார்.

**M. ராமநாதன் & பிரதர்ஸ்.**
நடராஜா நெசவுச்சாலை.
ராசிங்கன் பேட்டை.

---

23-9-28 பகல் ஒரு மணி வண்டியில் தஞ்சை ஜில்லாக்கல்வி யதிகாரி ஸ்ரீமான் P. P. S. சாஸ்திரிகள் B. A. (Ox'on) M.A., M C A S அவர்களும் கும்பகோணம் ரேஞ்சு டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் T C ரெங்காச்சாரியார் B A, L T அவர்களும், ஷை ரேஞ்சு டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் A சீனிவாசய்யங்கார் அவர்களும், திருவிடை மருதூர் ஆதீனம் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் N. பரமசிவய்யர் B, A. L. T. அவர்களும் போந்தனர். M, ராமநாதன் பிரதர்ஸ் நெசவுச்சாலையின் ப்ரொப்ரைட்டர் ஸ்ரீமான் T. A RM முத்துசாமி செட்டியார் அவர்கள் அழைப்பிற் கிணங்கி அதிகாரிகளும் உள்ளூர் பிரபல மிராசுதாரும் மில் சொந்தக்காரருமான ராவ்சாகிப் ஸ்ரீமான் N, T. ரெங்கசாமிரெட்டியார் O. B. E. அவர்களும் பிற்பகல் 3-30க்கு நெசவுச் சாலைக்கு விஜயம் செய்தனர். நெசவுச் சாலையில் மேளவாத்திய கோஷத்துடன் நெசவுசாலைத் தலைவரால் சிறப்பாக வரவேற்கப் பெற்றனர். நெசவுச்சாலையின் முகப்பில் கவின் பெறுபந்தரிடப் பெற்றிருந்தது. தலைவாயிலில் மகாத்மா காந்தியடிகளாரது திருவுருவப்படம் அலங்கரித்து மாட்டப் பெற்றிருந்தது. ஓர் புறத்தில் நெசவுச்சாலையில் தயாரான அழகிய மெல்லிய உடைகள் பலமாதிரிகள் வைக்கப்பெற்றிருந்தன. இவைகளை அதிகாரிகள் பார்வையிட்டு உள்புரம் சென்று நோக்கினர். ஆங்கு நாற்பதுவிசைநாடாகைத்தறிகள் வேலைசெய்துகொண்டிருந்தன. தொழிலாளர்கள் தம் கைத்தொழிலில் எத்துணை ஊக்கத்துடன் இருக்கின்றனர் என்பது அவர்கள் உற்சாகமாகச்செய்யும் வேலையின் போக்கால் நனிவிளங்கிற்று. ஏழேவயதுள்ள பால்மணம் மாறாப் பச்சிளங்குழவி எம். ராமநாதன் நெய்ததைப்பாராட்டாதாரில்லை. நெசவுச்சாலை முழுதும் சுற்றிப்பார்த்து வந்தபின்னர் அதிகாரிகட்கு சந்தன தாம்பூலம் வழங்கிமாலையிட்டுபுகைப்படம் எடுக்கப்பட்டது. போந்திருந்த கனவான்கள் யாவரும், நெசவுச்சாலை குறுகியகாலத்தில் பெருகிவளர்ந்திருக்கும் பான்மையைவியந்து கூறினர். ஜில்லாக்கல்வித் தலைவர் அவர்கள் நெசவுச்சாலையைப்பற்றி தமது எண்ணத்தை வரைந்திருப்பதில் தமக்குள்ள ஆற்றொணா ஆனந்தத்தையும் நெசவுச்சாலையின் துரித வளர்ச்சியையும் சுகாதாரமுறைக்கு அரண்செய்யும்முறையில் கட்டிடம் அமைந்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

புரொப்ரைட்டர்
தி. அ. ரும. முத்துசாமி செட்டி.

### வன்னியகுல க்ஷத்திரிய குலகுருவின் மரண அறிவிப்பு.

அந்தியூர் வன்னிய மடாலய சிம்மாசனாதிபதி ஸ்ரீமத் பாஸ்கர சுவாமிகளவர்கள் நாளது விபவ-ஞ புரட்டாசி-மீ 9உ திங்களன்று, பவானியிலுள்ள தமது மடாலயத்தில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்கள்.

இச்சுவாமிகள் பிரிவால் வன்னியகுல க்ஷத்திரிய மரபினர் யாவரும் பெரிதும் உளக கவலை யடைவார்கள் என்பது வெள்ளிடைமலை. ஷை சுவாமிகளது பூதவுடல் பவானி நதிக்கரையில் திரு. க. செங்கோட கண்டரவர்கள் வகையார் தோட்டத்தில் பல அன்பர்கள் காணச் சமாதி செய்யப்பட்டது.

ஷை சுவாமிகள் குமாரன், தினகரசாமி.

---

### பார்ப்பனீயமொழிந்த திதி சுயமரியாதைத் தலைவர் ஊர்வலம்.

கோட்டாறு:—இவ்வூர் பிரபலரும் திருச்செந்தூர் வெள்ளித்தாம்பாள கட்டளை தர்மகர்த்தா தலைவருமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் பசிதம்பரம்பிள்ளை அவர்களின் முதல் ஆண்டு திதிச்சடங்கு நாளது 3-ந்தேதி சனிக்கிழமையன்று வடிவரகர் "கல்யாண விலாஸ்" என்னும் கிருகத்தில் ஷையாரின் புதல்வர் திரு. ப. சி. தாணுமாலையப் பெருமாள் பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டது.

மேல் குறிப்பிட்ட கிருகத்தில் அமைக்கப்பட்டிருந்த கதர் கொட்டகையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், மகாத்மா காந்தி காலஞ்சென்ற பெரியார் முதலியவர்களின் படங்களும் அலங்கரிக்கப்பட்டுகுலைவாழைமரவிலைமுதலிய தோரணங்களினிடையே 'சுயமரியாதைஓங்குக' 'போலிப்புரோகிதம் ஒழிக' என்று எழுதப்பட்டிருந்த போர்டுகளும் தொங்கவிடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இந்நகர் சுயமரியாதைத் தலைவர் ஸ்ரீமான் கே. என். குமரேச பிள்ளை பி. ஏ. அவர்கள் வாத்தியகோஷத்துடன் ஊர்வலமாக கொட்டகைக்கு அழைத்து வரப்பட்டார். பின்னர் அவர் திதி முதலியவைகளின் பேரால் பார்ப்பனர்கள் செய்யும் புரட்டுகளைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்னர் திருவாளர் தாணுமாலையப் பெருமாள் பிள்ளையவர்கள் தமக்குச் சுயமரியாதையைப் போதித்த திரு நாயக்கர், தலைவர் முதலியவர்களுக்கு வந்தனோபசாரம் சொல்லிவிட்டு கடவுள் வணக்கம் செய்து பந்து மித்திரர்களுக்கும் சுமார் 600 ஏழைகளுக்கும் அன்னமளித்து தமது தந்தையாரின் ஞாபகார்த்தத்தைக் கொண்டாடினர். "கண்டுகளித்தோன்"

### 'பார்ப்பனப் புரோகிதமற்ற சடங்கு'

திருச்சி தென்னூர் பாப்புசெட்டி தெருவிலிருக்கும்பென்ஷன்சுபேதார்பகதூர் ஆர். தருகைய நாயுடுவின் குமாரத்தியும் மதராஸ் பயனீர் சுபேதார் வி. சங்கிலி நாயுடுவின் பாரியுமாகிய பங்கஜம்மாள் அவர்கள் 17—9—28ல் காலஞ்சென்றதைமுன்னிட்டு 26—9—28 புதன்கிழமை பார்ப்பனரில்லாமல் கருமச்சடங்குகள்செய்து பந்து மித்திர ஏழைகளுடன் சமபந்தி போஜனம் செய்யப்பட்டது.

டி. ஜி. வெங்கட்ராம நாயுடு.

### ஈரோடு முனிசிபல் கௌன்சிலர் தேர்தல்

26-9-28 ல் நடந்த ஸ்டேஷன்வார்டு தேர்தலில் ஸ்ரீமான் எம். சிக்கையநாயக்கரும் 29-9-28 ல் நடந்த அக்கிரகாரம் வார்டு தேர்தலில் ஸ்ரீமான் கே. சுந்தரமய்யரும் பெருவாரியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பார்ப்பனீயம் ஒழிந்த சடங்கு

சிறம்பான்:—வழக்கப்படி 30—8—28ல் பார்ப்பனரைக்கொண்டு ஆவணி அவிட்டத்திற்கு பூணூல் போட்டுக்கொள்வதை ஸ்ரீமான் ஜீ. கோபால்ராஜா உள்பட சுமார் 39 பெயர்கள் நிறுத்திவிட்டனர். அன்று தினம் பார்ப்பனர்களுக்கு சுமார் 75 வெள்ளிவரையில் வரும்படி குறைவு. ஒரு நிருபர்

---


## உடுமலைப்பேட்டை டி. டு. முன்சீப் கோர்ட்டு.

Claim No 901 of 25 E P R No 784 of 28

The President of the Ponneri Co-operative Credit Society by Karuppana Mudaliar—வாதி.

இராமசாமிக் கவுண்டன்—பிரதிவாதி

ஷை நெம்பரில் பிரதிவாதியின் சொத்துக்களை இஸ்தியார் அனுப்பி ஏலம் போட்டு வாதிக்கு டிகிரி தொகை வசூல் செய்துகொடுக்கவேணுமாய் மனுக்கொடுத்து அந்த மனுவானது 17—10—28 ல் வாய்தா போட்டிருக்கிறது. ஷை தேதியில் ஆக்ஷேபனை இருந்தால் கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு கக்ஷியாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வாதி வக்கீல், எ. ஆர். குருமூர்த்தி நாயுடு, பி. ஏ. பி. எல். உடுமலைப்பேட்டை.

---

தீபாவளி! தீபாவளி!

## நவீன கலர்புடவை.

உயர்ந்த மல்லில் பச்சை, புளூ, வயலெட் கருப்பு, செகப்பு, ஸ்நப் கலர்கள், கெட்டிச் சாயம், கரையிலும், முந்தியிலும் பூவேலைமான மூள்ள நூதன புடவை.

18 மு X 46 அங் புடவை ரூ. 4...14—0
ஷை கலர்களில் சாதா புடவை 4— 4—0

கைநிசவில் தயாரித்த உடல் செகப்பு, கருப்பு, பலமாதிரி புள்ளிகள் போட்ட ஜரிகை உத்திராட்சம் பேட்டுவைத்து 1 இஞ்சு ஜரிகை முந்தி போட்டது.

18 மு X 46 அங் புடவை 1க்கு ரூ. 7-0-0
ஷை ஜரிகை பெங்களூர் முந்தி போட்ட புடவை 1க்கு 7-12-0

6th Edition கேட்லாக் இனாம்.

The Madura Oriental Trading Co, Laxmi Cloth Store, Madura- (S. I.)


தாழ்த்தப்பட்டவர்களை சகோதரராகவும் சமத்துவமாகவும் நடத்தும்வரை சுயராஜ்யம் கிடைப்பது அரிது.

வீரய்யா.

## பல்லடம் பிர்க்கா, உபாத்திமைச் சங்க ஆண்டுவிழாவில் பார்ப்பனர் சூழ்ச்சி,

1. ஷை விழாவன்று "ஆரம்பக்கல்வி," "பெற்றோரும் உபாத்திமார்களும்," என்ற இரு விஷயங்களைப்பற்றி இரு பார்ப்பனர்களும், "தாழ்த்தப்பட்டவர்களும் ஆரம்பக் கல்வியும்," என்னும் விஷயத்தைப்பற்றி திரு ஜான் டேவிட் என்பவரும் பேசுவதாக 13-8-28-ல் நடந்த உபாத்திமைச்சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஷை ஆண்டுவிழாவில் நடைபெறப் போகும் விஷயங்களைத் தெரிவிக்கிற நிகழ்ச்சிக்குறிப்பு வெளியான பின்னர் பார்த்தில் அதில் ஷை இருபார்ப்பனர்கள் பெயர் மட்டும் இருந்தது; திரு ஜான் டேவிட்டின் பெயர் மறைந்தொழிந்தது. இது மேற்படி சங்கத்தில் பார்ப்பனருக்குள்ள ஆதிக்கத்தின் பலமா? ஒரு ஆச்சாரியார் அவைத் தலைமை வகிப்பதை எண்ணியா? என்பது எம்மனோர்க்கு விளங்கவில்லை.

### யார்குறைகளை யார்தீர்ப்பது?

2 கல்விக்காக பாடுபடும் சட்டசபைப்பிரதிநிதிகளையாவது ஜில்லா போர்டு தாலூக்கா போர்டு தலைவர்களையாவது ஜில்லா கல்வித் தலைவர்களையாவது தலைமை வகிக்கும்படி செய்து? அவர்கள் முன்னிலையில் தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னால், அக்குறைகளை நீக்குவார்களென்ற பேராவுடன், எல்லா உபாத்திமைச்சங்க ஆண்டுவிழாக்களிலும் ஷை பெரியோர்களைத் தலைமை வகிக்கும்படி செய்து வருகிறார்கள். ஆனால், பல்லடம் பார்ப்பன உபாத்திமைச்சங்கத்தில் பள்ளிக்கூடத்து உள் அறையில் பதிந்துகிடக்கும் ஒரு பார்ப்பன உபாத்தியாயரைத் தலைவராகத்தேர்ந்தெடுத்து அவர் முன்னிலையில்பல குறைகளைச் சொல்லிக்கொண்டதும் தலைவரும் தம்முடைய குறைகளைச்சங்கத்தின் முன் சொல்லிக் கொண்டதும் எதை உத்தேசித்தோ! இதில் யார் குறையை யார் தீர்ப்பது என்னும் சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொறுப்பை வாசர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

### தாழ்ந்தவரா தாழ்த்தப்பட்டவரா?

3. ஷைதிரு ஜான்டேவிட்என்ற ஆதிதிராவிடசகோதரர்கிருஸ்துவமதத்தைத் தழுவியதனால்உபாத்தியாயர் வேலைக்காவது இடமுண்டாயிற்று. ஷையார்பெயர்நிகழ்ச்சிக்குறிப்பில் இல்லாவிடினும், தாம்எடுத்துக்கொண்டவிஷயத்தைப்பற்றிகண்டிப்பாய் பேசவேண்டுமென்று வற்புறுத்தியதால் பார்ப்பனர்கள் இருவரும் பேசியதன்பின் காரியதரிசியின் சிபார்சின்பேரில், பேசுவதற்கு தலைவர் அநுமதிகொடுத்தார். அவர் உபந்யாசத்தின் சில முக்கிய விஷயங்களாவன:

"உயர் குலத்தோர் என்பவர்கள் செய்யும் கொடுமையாலும் அதனால்ஏற்பட்ட பாழும் வறுமையாலும் நாங்கள் தாழ்த்தப்பட்டோமேயன்றி பிறவியில் நாங்கள் தாழ்ந்தவர்கள் அல்ல. உயர்குலத்தோர் என்பவரின் கொடுமையாலேயே நாங்கள் கல்விகற்று முடியாததாயிருக்கிறது. உதாரணமாக தற்காலத்தில் லோகல்போர்டு பாடசாலைகள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பட்டு வந்தாலும், பாடசாலை கட்டிடங்கள் வாடகைக்கட்டிடங்களாய் இருப்பதால் உயர்ந்தோர் என்போருக்கேயன்றி, தாழ்த்தப்பட்டவர்களுடைய நிழலும் அப்பாடசாலையுள் விழமுடியாமற்போகிறது. கவர்ன்மெண்டார் இன்னும் அதிகமுயற்சி எடுத்துக்கொண்டாலன்றி நாங்கள் முன்னேறும் வழியில்லை" யென்று அதிக உருக்கமாகப் பேசிமுடித்தார்.

### கீழேதள்ளினதல்லாமல் குழியும்பறித்தது

4. பின்னர் தலைவர் எழுந்து முன்பேசின பார்ப்பனர்கள் விஷயங்களைத்தழுவி, இரண்டொருவார்த்தை சொல்லிவிட்டு, திருஜான் டேவிட்டின்பேரில் சீறிவிழுந்து (அவருக்குப் பேசஅநுமதிகொடுத்ததே குற்றம்என்னும் பொருள்பட) "இவர்பெயர் நிகழ்ச்சிக்குறிப்பில் இல்லாமலிருந்தும், சிபார்சின்பேரில் பேச அநுமதியளித்தேன். இவர், தாழ்த்தப்பட்டவர் என்னும் வாக்கியத்தையும் பற்பல முறைசொல்லிவந்தார். இவர்களே தாழ்ந்தவர்களாயிருக்க, தாழ்த்தப்பட்டவர்என்று சொல்வது சரியாய் உணராத குற்றமேயாகும். இவர்களையார் தாழ்த்தினார்கள்" என்று இறுமாப்புடன் பேசினதோடு திரு டேவிட் செய்தஉபந்யாசம் முழுவதையும் வேண்டுமென்றே தாக்கிப்பேசி, சங்கப் பார்ப்பனர்களுக்குச் சந்தோஷ மூட்டிச் சென்றார்

ஒழுக்கமற்ற விதிகளைச்சொன்னவர், சொல்பவர் எவரேயாயினும் அவர்களிடம் கருணைகொள்ளாது அவ்விதிகளைக் கண்டனம் செய்யும் "குடி அரசு" தோன்றியுள்ள இக்காலத்திலும் பார்ப்பனரின் மனப்பான்மை இருந்தவாறென்னே! என்னே!!

கண்ணுற்கண்டோன்

## அந்தோ!
## ஏழைபங்காளர்.
## ஸ்ரீ நாராயணகுருசுவாமிகள் காலஞ்சென்றார்.

பெரியார் ஸ்ரீ நாராயணகுரு சுவாமிகள் தம் 72-வது வயதில்1104-வதுகொல்லம்(விபவ) புரட்டாசி மாதம் 5-ம் தேதியன்று சிவகிரி என்ற இடத்தில் காலஞ்சென்றார் என்பதைக்கேட்டு மிகவும் வருந்துகிறோம். சுவாமிகள் 1032-ஆம் கொல்லம் ஆண்டு திருவனந்தபுரத்துக்கடுத்தகுளத்தூர் என்ற இடத்தில் ஈழவ சமுதாயத்தில் ஓர் ஏழைக்குடும்பத்தில் அவதரித்தவர்.

குழந்தைப்பருவம் கடந்து தமது வாலிப பருவத்தில் ஒரு உபாத்தியாயராகஇருந்து காலங்கழித்தார். அதன்பின் பொது ஊழியத்தில் தலையிட ஆரம்பித்தார்.

இந்த முறையில் இவர்செய்துள்ள அரும்பெரும் செயல்கள் பலவுள. தாழ்த்தப்பட்ட ஈழவர்கள், தீயர்கள் மற்றும் புலையர்கள் எனப்படும் சகோதரர்களுக்கு கல்வி விஷயமாகவும், கோவில் விஷயமாகவும் சொல்லற்கரிய நன்மை புரிந்திருக்கின்றார்கள். ஆங்காங்கே பல பாடசாலைகள் ஏற்படுத்தியும் கவர்மெண்டின் மூலமாக மாணவர்களுக்கு பகுதிச்சம்பளம் ஏற்படுத்தியும், இச்சகோதரர்கள் கல்வியில் முன்னடையவழி செய்துள்ளார்.

அனேககோவில்கள் விஷயமாகவும் இவர் செய்துள்ள முயற்சிகள் எண்ணரிய சுவாமிகள் அங்கங்கே பல கோவில்கள் கட்டியும் சமஸ்கிருத பாடசாலைகளும் ஏற்படுத்தியும் மாணவர்களுக்கு வடமொழி ஞானமும் பயிற்றுவித்தும் பிராமணர்களின்உதவியில்லாமலே கோவில்களுக்குள் பூஜை முதலிய காரியங்கள் அந்தந்தயாபில் உள்ளவர்களே செய்யச்செய்தும் வைத்துள்ளார் சுவாமிகள் தர்மத்தை பரிபாலனம் செய்வதற்காக "ஸ்ரீ நாராயணதர்ம பரிபாலனயோகம்" S N DP yogam என்ற ஒரு சங்கம் நிறுவியுள்ளார்கள். இதன்பயனாக சட்டசபையில் தாழ்த்தப் பட்டவர்களுக்காக அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஈழவசமுதாயத்திற் படித்தவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கவேண்டுமென்று இந்த சங்கம் ஆரம்பித்துள்ளது. கவர்ன்மெண்டாரும் அதை அங்கீகரித்துள்ளார்கள். இதுபோன்ற பல நன்மைகள் இச்சங்கத்தினின்றும் ஷை சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ளன. நம் குருஸ்வாமியவர்கள் இந்தியாமுழுவதிலும் சுற்றுப்பிரயாணம்செய்து பல பெரியார்களோடு அளவளாவி இருக்கின்றனர். இத்தகைய பெரியார்காலஞ் சென்றது தாழ்த்தப்பட்ட எல்லா மாயினர்களுக்கும் பெரும் நஷ்டமே.

நாகேந்திர நாதன்

## பார்ப்பனீயமொழிந்த திதி.

கொழும்பு 5 நெ. குருக்குத்தெரு அரிசி வியாபாரம் திருவாளர் கண சு. ப. கண்ணப்பபிள்ளையவர்கள் திருக்குமாரன் திருவாளர் சுப்பையாபிள்ளையவர்கள் தமது அன்னையாரின் திதிசடங்கை பார்ப்பனீயமும் புரோகிதமுமின்றி சுயமரியாதையின்படி 23-9-28 ல் பந்துமித்திரர்களுக்கு விருந்திட்டு சிறப்பித்தார்கள். மு. ஷண்முகம்.





## சகலமேக சஞ்சீவி.

தங்கம் சேர்ந்தது, அநேக மெடல்கள், பரிசுகள், பத்திரங்கள் பெற்றது. பல காரணங்களாலுண்டான வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், நீரழிவு, கண்டமாலை, சூலைநீர், பற்றுவாரல், கிரந்தி, கட்டிகள், கருமேகம், வெண்மேகம், ஆராதரணம், புத்து, பீநிசம், கபாலநீர், இளைப்பு, காசம், குன்மம், சூதகம், கண் வியாதிகள், வாதநீர்கள் முதலியன 7 நாள் மருந்தில் நிச்சயமாகக் குணமாகும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 5—0—0.

கல்நார் பற்பொடி டஜன் 1-க்கு ரூ. 2½.

## சி. எம். சாமி,

நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

## பண்டிகை என்றாலென்ன? மாமிசம் புசிப்பதும் மது அருந்துவதுமா!

கிறிஸ்துமத ஆகமத்தில் பண்டிகைகளைப் பற்றி அதிகமாகச் சொல்லி இருந்தபோதிலும் முக்கியமாக நம் தமிழ் கிறிஸ்தவர்கள் இரண்டு பண்டிகைகளை மட்டும் அனுசரித்து வருகிறார்கள். அவையாவன:- "கிருஸ்து பிறந்தநாள்" மற்றொன்று மரித்து "உயிர்த்தெழுந்தநாள்" என்பவைகளே. இப்பண்டிகைகளை அவர்கள் எவ்வாறு அனுசரித்து வருகிறார்களென்பதைச் சீர்தூக்கிப் பார்க்கின் மிகவும் வெட்ககரமானதாகவே முடியும்.

ஏனெனில், பண்டிகைக்கு ஒருமாதகாலத்திற்கு முன்னதாகவே, பண்டிகை வருகிறது! பண்டிகைவருகிறது! என தமாஷாகச் சொல்லிக்கொண்டு நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் நல்ல உயர்ந்த விலையுள்ள உடுப்புகள் வாங்குவதும், தம் சுற்றத்தார்களை விருந்திற்கழைக்கவேண்டுமென்று ஆட்டுக்கிடாய்களை வாங்கி வளர்ப்பதும், இப்பண்டிகை லீவை நாம் எவ்வாறு கழிப்பது, குற்றாலம் அருவியைப்பார்க்கப் போவோமா? அல்லது கொடைக்கானல் மலைக்குப் போவோமா? அடுத்தமாதச்சம்பளத்தையும் சேர்த்து வாங்கினால் நமக்கிருக்கும்செலவுகளுக்குப்போதாதா? என்றெண்ணுவதுமாயிருக்கின்றார்கள். இன்னும்பல ஆடம்பரத்திற்கானவைகளையெல்லாம் இப்பண்டிகை நாட்களில்தான் அனுபவித்துக் கழிக்க விரும்புகின்றார்கள்.

நிற்க, பண்டிகை தினமோ அதோ! இதோ! வென வந்து விடுகின்றது. எங்கு பார்க்கினும் வாணவேடிக்கைகளும் அதிர்வேட்டு சப்தங்களும் காது செவிடுபட ஒலிக்கின்றன. வீடுகளிலோ பெரியோரும் சிறியோரும் பெண்களும் பிள்ளைகளும் உற்சாக ஆரவாரம் செய்கின்றார்கள். ஒவ்வோரில்லத்திலும் பலகார வகைகள் சமைப்பதிலேயே பெண்கள் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள்.

இவ்விதவேலைகளின் மத்தியில் பண்டிகை ஆராதனை நடத்துவதற்கு கோவிலில் மணியடிக்கின்றது. உடனே எல்லோரும் தத்தமக்கென முன்னதாகவே ஆயத்தம் செய்து வைத்திருக்கும் பட்டுப் பட்டாடைகளை அணிந்து கொண்டு சந்தோஷமுகத்தினராய் கோவிலுக்குப் போகிறார்கள். போயினுமென்ன! அநேகர், அங்கு பேசப்படும் சத்திய உபன்யாசங்களைச் செவிகொடுத்துக் கேட்பதில்லை! பாதிஜெபம் முடியுமுன் ஆண்களில்பலர் "எது? பாதிரியார் பிரசங்கத்தை நீட்டிக்கொண்டே போகிறார். நேரமும் விடிந்துவிட்டது, இன்னும் வீட்டிற்குப்போய்க் கிடாயை அறுத்து சமைக்கக் கொடுத்துவிட்டு சுமார் மூன்றுமைலுக்கப்பாலிருக்கும் கிராமத்திற்குப்போய் (குடியைக் கெடுக்கும்) மது வாங்கப்போகவேண்டுமே" என்ற எண்ணத்தோடே இருப்பவர்களுமுளர். பெண்களிலும்சிலர் "ஆகா! பலகாரம சுட்டதில் பாதிமாவுகூட சுட்டுஎடுக்கவில்லையே! ஜெபம்முடித்துப்போய் பாக்கியையும் சுட்டு எடுக்கமணியும் எட்டு ஆகிவிடும்போலிருக்கிறதே! கொஞ்சம் முன்னதாக முடித்துவிட்டால் வீட்டுவேலைகள் எல்லாம்பார்க்க வசதியாயிருக்கும்" என உன்னுபவர்களுமுளர்.

இவ்வித எண்ணத்துடனே ஜெபம் முடித்து வீட்டிற்கு வந்தவுடனே ஆண்களில் பலர், தாம் அருமையாக புல் தண்ணீர் முதலியவற்றை வைத்துவளர்த்த கிடாய்களை கீழே தள்ளி காலால் மிதித்துக்கொண்டு கழுத்தை அறுத்து சமையல்பாகத்துக்குரிய வண்ணம் செப்பனிட்டுக் கொடுத்துவிட்டு தாங்கள் கோரியவண்ணம் மதுவருந்தச்சென்றுவந்து, இல்லாளால் சமைக்கப்பெற்ற மாமிசத்தை தானும் பிள்ளைகளுமாக உண்டு உறங்குவதுந் தான்பண்டிகை கொண்டாட்டமெனவெண்ணிக் கொண்டாடுகிறார்கள். என்னே இவர்களின்மதி!!

கிறிஸ்தவ சகோதரர்களே! இவ்விதமான கெட்டபழக்கங்களை விட்டுவிட்டு கிருஸ்துவின் மூல உபதேசமாகிய, தருமம் செய்தல், அன்னியரை உபசரித்தல், முதலிய கருமங்களில் கவனம் செலுத்தி பண்டிகைநாட்களைச்சிறப்பிக்கக்கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஓர் கிறிஸ்தவர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோகிகள் நம் இரத்தத்தைஎப்படி உறிஞ்சிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வீர்கள். ஒவ்வொருதேசமும் இந்த அயோக்கிய குருமார்களாலேயே வெகுகாலம், கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. பின்பு, அவர்கள் தங்கள் அறியாமையை உணர்ந்து அவர்களை ஒழித்துவிடவே, தற்சமயம் அந்நாடுகள் எல்லாம் நாம் ஏட்டில் மட்டும் பார்த்து, கண்ணால் ஒருவரும் பார்க்கமுடியாது என்று நினைத்துக்கொண்டிருக்கிற தெய்வேந்திரலோகமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

நம்மை என்றும் தலைதூக்கமுடியாதபடி மூட பழக்கவழக்கங்களிலாழ்த்தி, நம் ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருக்கிறதண்டசோத்து தடிராமன்களான, லோககுரு, பண்டார சன்னதிகளின் கூட்டத்தார்களை, சுத்த ரத்தஓட்டமுள்ள, சுயமரியாதை உள்ள, பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் பஹிஷ்கரிக்க வேண்டியதேயல்லாமல் காட்டின் நலத்தை முன்னிட்டுவரும் 'லைமன் கமிஷனையல்ல.

## பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்

மாயவரம் புதுத்தெரு ஸ்ரீமான் எதிராஜலுதாஸ் அவர்களின்செல்வத்தனயன்சுந்தராஜுலு நாயுடுவுக்கும் திருத்துறைப்பூண்டி வீராசாமி நாயுடு செல்வக்குமாரத்தி சுப்புலக்ஷிமி அம்மாளுக்கும் நாளது விபவ ஆண்டு ஆவணித்திங்கள் 25ம் நாள் பார்ப்பனபுரோகிதமின்றி திரு அப்பாயிதாஸ் அவர்களால் தமிழ் மொழிகளால சுயமரியாதைத்திருமணம் சிறப்பாக முடித்துவைக்கப்பட்டது.

## பள்ளிக்கூடங்களில் வகுப்பு வித்தியாசம் நீக்கப்பட்டது

பம்பாய், செப் 24— பம்பாய்க் கார்ப்பொரேஷனின் பள்ளிக்கூடக் கமிட்டியானது குழந்தைகளுக்குக் குடிப்பதற்காக வைக்கப்படும் ஜலம் பொதுவான பாத்திரங்களிலிருந்தேஎல்லோருக்கும் கொடுக்கப்படவேண்டுமென்றும் இம்மாதிரியான தண்ணீரைக் குடிக்க இஷ்டப்படாதவர்கள் தங்களுடைய சொந்தப் பாத்திரங்களைக் கொண்டுவரவேண்டுமென்றும் எழுதியிருந்தது. இது பற்றி இன்றைய தினம் விவாதம் நடந்தது. இதைச் சிர்திருத்தத்தை எதிர்த்து ஸ்ரீமான் போதனவால்சாவும்மற்றும் சிலரும் "கார்ப்பொரேஷன் இஷ்டப்படாதவர்களையும் அறியாத சிறுவர்களையும் வற்புறுத்த உரிமை பெற்றிருக்கவில்லை." என்று கூறி பழைய முறைப்படியே தனித்தனியாய் பாத்திரங்களை வைத்திருக்கவேண்டுமென்ற திருத்தப் பிரேரேபணைகொண்டுவந்தனர். இத்திருத்தப் பிரேரேபணை பெரும்பான்மையான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. ப்ரீ பிரஸ்.

## திருத்துறைப்பூண்டி அகமுடையர் மாணவர் நிலையம்.

அகமுடையர் வாலிபர் நிலயத்தின் முதலாவது ஆண்டு விழா செப்டம்பர் மாதம் 8-உ சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் கிரே ஐ. சி. எஸ். அவர்கள் தலைமையின் கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது. சிற்றுண்டி வழங்கப்பட்டபின் நிலயத்திற்கு முன் அமைக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட பந்தலில் பொதுக்கூட்டம் கூடிற்று. முக்கியமாக திருவாளர் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு எ. டி. பன்னீர்செல்வம், வலிவலம்கே. மனத்துணைநாத தேசிகர், பாண்டிய சோமசுந்தரம் பிள்ளை, திருத்துறைப்பூண்டி யூனியன் சேர்மேன் எஸ். வைத்தியநாத தேவர் இவர்கள் வந்திருந்தார்கள். நிலயத்தின் மாணவரால் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. பிறகு காரியதரிசி சி. ராஜகோபால பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களால் வருஷாந்திர அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பட்டது. நிலயம் 10 மாணவர்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. தற்காலம்32மாணவர்கள்வரையில்இருக்கிறார்கள். அறிக்கைப்பத்திரத்தில் மொத்தமாக கட்டிடமும் நிதியும்வேண்டுமென்றும்தனவந்தர்களும் கவர்ன்மெண்டும் உதவிபுரிய வேண்டுமென்றும் கண்டிருந்தது. பிறகு மாணவர்கள் இருவரால் நிலயத்தின் அவசியத்தைப்பற்றி சம்பாஷணை நடந்தது. போர்டு ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஷை விஷயமாக பேசினார் பிறகு திரு. எ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் நிலயம் செவ்வனே நடைபெறுவதைப்பற்றி சந்தோஷப்பட்டு தம்முடைய டிஸ்திரிக்டு போர்டுஸ்கூலுக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கிறதென்று குறிப்பிட்டார். வலிவலம் உயர்திரு கே. மனத்துணை நாததேசிகர் அவர்கள் நிலயத்திற்கு வருஷம் 1 க்கு 5 வண்டி நெல் தருவதாக வாக்களித்தார். பிறகு தலைவர் அவர்கள் எழுந்து இது வரையில் நிலயம் நடந்துவந்ததைப் பற்றிசந்தோஷப்பட்டு இனிமேல் மேலும் விருத்தியாகவேண்டுமென்றும் தானும் வேண்டிய உதவிபுரிவதாகவும் சொன்னார், இத்துடன் கூட்ட இனிது முடிந்தது. ஒரு நிருபர்.

6-ம் பக்கத்தொடர்ச்சி.

உனக்கு தங்கையாக பிறந்து விட்ட காரணத்தினால் அந்த சுக போகத்தை அடைய யோக்கியதையில்லாதவளாய்ப் போய் விட்டேனே'' என்று துக்கப்பட்டதாகவும், கிருஷ்ண பகவான் பார்த்து "உலகத்திலேயே மிகவும் புண்ணிய பூமியாகிய ஜகநாதம் என்கின்றதாக ஒரு ஸ்தலம் இருக்கின்றது; அங்கு எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது; எந்த விதமான செய்கைக்கும் பாவம் கிடையாது; ஆதலால் அந்த ஜகநாதத்திற்குப்போய் எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிக்கலாம்'' என்பதாகச் சொல்லி ஜகநாதத்திற்கு வந்து கிருஷ்ணன் சுபத்திரை பலராமர் ஆகிய சகோதர சகோதரிகள் ஒன்று சேர்ந்து இருப்பதாகவும் ஒரு கதையை ஜெகநாத பண்டாக்கள் ஸ்தல மகிமையைச் சொல்லும் முறையில் சொல்வதுண்டு.

எனவே இந்தக்கதையும் பொருத்தமானதாயிருக்கலாம் என்கின்றமாதிரியில்தான் அங்கு மற்ற விஷயங்களும் இருக்கின்றன. அதாவது திட்டு இல்லை; ஜாதிவித்தியாசமில்லை; ஸிரார்த்தி அனுஷ்டானம் இல்லை; எச்சில் வித்தியாசமில்லை என்பது போன்ற பலவிஷயங்கள்இருப்பதுடன் அண்ணன்மாரும் தங்கையும் ஒன்றாய் இருந்தாலும் இருக்கலாமாம். அன்றியும் அந்த ஸ்தலத்திற்கு அதிகமான யோக்கியதை கொடுக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின்பேரில் இப்படி ஒரு கற்பனை செய்து இருந்தாலும் இருக்கலாம். சாதாரணமாக சைவசமயத்திலும் ஒருஸ்தலத்தையோ தீர்த்தத்தையோ ஒருசாமியையோ பெருமைப்படுத்துவதில் இதுபோன்ற அல்லது இந்த தத்துவம்கொண்ட கதைகள் சொல்லப்படுவதையும் பார்க்கின்றோம். அதாவது திருவிளையாடல் புராணத்தில ஒருவன் தன் தாயைப்புணர்ந்ததுடன் தகப்பனகண்டு கோபித்ததற்கு தகப்பனையும் கொன்றுவிட்ட பாவத்தை சிவன் போக்கியிருப்பதாகவும அந்த ஸ்தலத்திற்கும் தீர்த்தத்திற்கும் அந்த கடவுளுக்கும் இன்னமும் அந்த சக்திகள் இருப்பதாகவும் கருதும்படி சொல்லப்படுகிறது. ஆதலால் இப்படிப்பட்ட கதைகள் கட்டுவது ஒரு அதிசயமல்ல. எனவே இந்தக்கதை எப்படி இருந்தாலும் முதல் கதையைப்பற்றி யோசிப்போம்.

கடவுள் அவதாரமாகிய கிருஷ்ண பகவான் எவ்வளவோ அற்புதங்களைச் செய்தவர். கடவுளான அவர் செத்துப் போனார் என்பதும் அவர் பிணம் கொளுத்தப்பட்டது என்பதும், நெருப்பில் வெந்துகொண்டிருக்கும்போது ஜலப்பிரளய மேற்பட்டு அந்தப் பிணம் சரியாய் வேகாமல் தண்ணீரில் மிதந்துகொண்டு வந்து ஜகநாதத்தைச் சேர்ந்த கடற்கரையில் ஒதுங்கியது என்பதும் ஆகிய விஷயங்களை யோசித்துப் பார்த்தால் கிருஷ்ணனிடத்தில் கடவுள் தன்மை இருந்திருக்கும் என்று நம்ப இடமுண்டா? நம்புவதானாலும் செத்தபிறகு அந்தப்பிணத்திற்கு அதுவும் நெருப்பில் கருக்கப்பட்ட அரைகுறைப் பிணத்திற்கு ஏதாவது சக்தி இருந்திருக்குமா? அந்த சக்தியை மாக்கட்டையில் ஏற்றமுடியுமா? அந்தமாக்கட்டையும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்ற போதெல்லாம் அந்தசக்தி மாறிமாறி அதில் வருமா?

தவிரமற்றும் ஒரு அதிசயம் சொல்லுகிறார்கள். அதாவது கோவிலில் இருக்கும்மாக்கட்டைக்கு சக்திகுறைந்துபோனால் அந்தசமயம் அதாவது 10 அல்லது 20 வருஷத்திற்கு ஒருமுறை மறுபடியும்சமுத்திரத்தில் ஒருகட்டைமுன்பு பிணம்மிதந்துவந்ததுபோல்மிதந்துவருமாம். அதை எடுத்து மறுபடியும் விக்கிரகம் செய்துவைத்து விடுவதாம். இதன் யோக்கியதைகளை வாசகர்கள் தான் யோசித்துப்பார்க்கவேண்டும்.

முன்புவந்த குறைப்பிணம்ஜலப்பிரளயத்தால் வந்தது என்று சொல்லப்படுகின்றது. அதுபோல் இப்போது வந்துகொண்டிருக்கும் மாக்கட்டைக்கும் ஏதாவது ஜலப்பிரளயம்கற்பிக்கப்படுகிறதா? எனவே புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் சிறந்த புண்ணியஸ்தலமான ஜகநாதத்தின் நிலைமை அந்த ஸ்தல சரித்திரப்படியே யோசித்துப்பாருங்கள்.

இந்தலக்ஷணத்தில் அங்குஒரு தீர்த்தமகிமையும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி பின்னால் ஆராய்வோம்.

இவ்வளவையும் ஒப்புக்கொண்டு அந்தஸ்தலத்திற்கு யாத்திரை போகின்றவர்களுக்கு ஏதாவது விசேஷஞானம் ஏற்படுகிறதா? அல்லது அந்தஸ்தலசரித்திரத்தின் யோக்கியமானகற்பனையையாவதுமதித்து ஏதாவது ஒழுக்கத்தைப்பெறுகின்றார்களா? ஒன்றுமேயில்லாமல் ரயில்சார்ஜு செலவும், பூசாரி, பார்ப்பான் முதலியவர்களுக்கு செலவும் செய்ததல்லாமல்வேறு பலன் என்ன என்பதுதான் இது எழுதியதின் கருத்து.

## ஈரோடு தாலுக்கா சூரம்பட்டி சுயமரியாதைசசங்கம்

சென்ற 19-9-28ல் கூடிய மஹாசபை மீட்டிங்கின் நடவடிக்கைகள்

தீர்மானம் 1. 2. நமது சங்கத்திற்கு ஸ்ரீமான் திரு மா, செல்லப்பகவுண்டர் பிரசிடெண்டாகவும் திரு ஆ. மு. தேசிகர் காரியதரிசியாகவும் திரு சு. ரா. ராஜுனையக்கரை உபகாரியதரிசியாகவும் திரு இ' குப்பணகவுண்டர் திரு க. மாறப்பகவுண்டர் திரு செ. கருப்பணயக்கர் முதலியபேர்களை கமிட்டியார்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தீர்மானம் 3. இச் சங்கத்தின் திறப்பு விழா 1928 ஞு செப்டம்பர் மீ 30 தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களால் நடத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. காரியதரிசி.

## சேலம் ஜில்லா அரூர்தாலூகா யவன சங்கம்

இச்சங்கம் சென்ற. 22—9—28 அரூரில் ஷை சங்கத்தின் ஆதாவில் பென்ஷன் போலீஸ் திரு ஏ நாராயணசாமி நாய்க்கர் தோட்டத்தில் கோயமுத்தூர் அழகேசன் பத்திராதிபர் ஸ்ரீமான் சுகவனம் அ சுப்ரமண்யம் அவர்களின் தலைமையின்கீழ் கூடியது. திரு டி எம் பரசுராம நாயக்கர் காரியதரிசியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். நம்மஞை குற்றமரபினர்களென்று நமது சுவர்மெண்டாரால் கருதியிருப்பதை மாற்ற வழிதேட வேண்டுமென்றும் இதற்கென சிலரை பல இடங்களிலும் தெரிந்தெடுக்க வேணுமென்றும் யவன குல முன்னேற்றத்திற்கான பல தீர்மானங்கள் செய்யப்பட்டன காரியதரிசி

## சோதிடப்புரட்டு.

### தி. அ. வேங்கடசாமி எழுதியது.

(கும்மிப்பாட்டு)

1. பொல்லாதநாளில் பிறந்தவர்மாத்திரம்
பொட்டென்றிறந்துமே போனாரோ
நல்லநாள் தன்னிற்பிறந்தவர்சாகாமல்
நாட்டிலிருந்தாரோ ஞானப்பெண்ணே.

2: நல்லநாள் பொல்லாநாள் என்றுபார்ப்பா [ரேய்த்து
நாட்டில் பிழைக்க எழுதிவைத்தார்
நல்லநாள் பொல்லாநாளுக்கடையாளம்
நவிலமுடியுமோ ஞானப்பெண்ணே

3. நாளும் திங்களும் நன்மை செய்தாலினி
நாம்தொழில் செய்திடக் காரணமேன்
பாழும்புராணங்கள் சோதிடக்குப்பைகள்
பாழ்க்குழிதள்ளடி ஞானப்பெண்ணே

4. வியாழக்கிழமையில் கோடியுடுத்தால்
விளையும் பொன்னென்றால் வறியவர்கள்
வியாழத்திற்கோடியுடுத் துப் பொன்பெற்று [மே
மேன்மையுறலாமே ஞானப்பெண்ணே

5 வெள்ளியிற் கோடிகொண்டால் பெண் [ணின்சேர்க்கை
விளையுமென்றால்மண மில்லாதார்
வெள்ளியிற்கோடி கொண்டேநல்லபெண்
விவாகம்செயலாமே ஞானப்பெண்ணே[ணே

6 வெள்ளிக்கிழமை கடன்கள்கொடார்தங்கள்
வீட்டிற்பொருள்கள் இரவல்கொடார்
வெள்ளிக்கிழமைபிறர்பொருள் வாங்குதல்
மேன்மையாம் பாரடி ஞானப்பெண்ணே

7· ஞாயிறுசெவ்வாய் பொன்நாள்விருந்துபகை
நண்ணும் திங்கள்திரும் பாப்பயணம்
எயம்புதன்சனி கோடியுடாரெனின்
எந்தநாள் நல்லநாள் ஞானப்பெண்ணே

8 சித்திரைமைந்தன் பிறக்கொணுதென்றலச்
சித்திரையிற்புவிமேற்பிறந்தோர்
எத்தனைகோடி யுண்டத்தனைபேர்களும்
இடருற்றார்களோ ஞானப்பெண்ணே

9 ஆகாதநாளில் சமைந்தவள்தாலி
யறுபட்டுப்போவது மெய்யானால்
வாகானநாளில் சமைந்தவளும் அவ
மங்கிலியாவதேன் ஞானப்பெண்ணே

10 பார்ப்பாரல்லவோ சாஸ்திரஞ்சொல்வதும்
பஞ்சாங்கங்கள் கணிப்பதுவம்
பார்ப்பாருக்குள்ளும் விதவைகளுண்டான
பண்பிங்கேதடி ஞானப்பெண்ணே

11 பத்துப்பெண்டுகள் நின்றக்காலதில்
பார்ப்பார்விதவைகளொன்பதுபேர்
இத்தன்மையாகிய சோதிடப்புரட்டில்
ஈடுபடலாமோ ஞானப்பெண்ணே

12 ஆடி மாதக் குருக்கரெல்லாங்கலி
யாணங்கள்செய்து செழித்திருக்க
ஆடி மாத புனக்குவாதெதன்
ருர்சொல்லித்தந்தது ஞானப்பெண்ணே

13 சோதிடந்தன்னைப் புராணத்தைநம்பினால்
சோறுகிடைக்குமோ ஞானப்பெண்ணே
போதுவீணுகாம லேபலதொழிலும்
புரிந்துவாழலாம் ஞானப்பெண்ணே

14 சோதிடத்தோடு புராணம் புரோகிதம்
சோறுபார்ப்பானுக்கே போடுமல்லால்
யாதுமவற்றால் பயன்நமக்கில்லையென்
றறிந்துகொள்ளடி ஞானப்பெண்ணே

## வருந்தவேண்டாம்.

சகோதரர்களே!

சில வருடங்களாகமது திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் நம்மக்களின் விடுதலைக்காக எவ்வளவு உழைத்து வருகிறார் என்பதும், அவருடன் எத்தனையோ பேறிவாளர்கள், வேதம், புராணம், மதம், ஜாதி, முதலிய வற்றின் ஆபாசங்களை வெளியாக்கி உண்மையை விளக்கியும், சுயநலப் பார்ப்பனீயத்திலிருந்து மக்களை விடுதலைசெய்தும் வருவது சுயமரியாதை ரத்தமுள்ள நேயர்கள் அறியாமலில்லை. "நாம் இத்தொண்டர்களின் சொற்பொழிவுகளை நேரில் கேட்டானந்திக்க முடியவில்லையே யென்று யாரும் வருந்த வேண்டியதில்லை. ஏனெனில் "குடி அரசு" என்னும் பத்திரிகை நாடெங்கும் பிரயாணஞ்செய்து மூலைமுடுக்குகளிலுள்ள மக்களையும் தட்டிஎழுப்பி மேற்படி சுயமரியாதைத் தலைவர்களின் சொற்பொழிவுகளின் ரசத்தை ஊட்டிவருகிறது. அன்றியும் அது ஏனைய சமாச்சார பத்திரிகைகளைப்போல் பார்த்தவுடனேயே அப்புறம் எறிந்துவிடப்படக்கூடியதல்ல. நம் "குடி அரசை" சிறந்த பொக்கிஷமாக பாவித்து வைத்திருந்தால் சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாய் பேசும் கோடாரிக் காம்புகளுக்கு சிறந்த ஆப்பு கொடுக்கப்பயன்படும், ஆகவே, நேயர்களே! "குடி அரசுக்கு" சந்தாதாரர்களாக சேருவதும் பிறரை சேரச்செய்வதும், குடி அரசைப் படிப்பதும், பிறரை படிக்கச்செய்வதும், நாம் படித்தவிஷயங்களை நம் குடும்பத்தாருக்கும் பந்துக்களுக்கும் விடமாய்ச் சொல்வதுமே நம் முதற்கடமை,

ஷண்முகன்

## பெ. புதுப்பட்டி கிராமம் சுயமரியாதைச் சங்கம்,

இன்றுமாலை 7-30 மணிக்கு மேற்படி சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. உயர் திரு ம. சொ. திருவெங்கடராமானுஜம் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள். காரியதரிசியினால் 7-9-28 ல் நடந்த கூட்டத்தின் அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டபின் சு. ந. போடியவர்களால் "சிரார்த்தம் செய்வதால் இறந்தவர்கள் மோக்ஷமடைவார்களா" என்னும் பொருள்பற்றி மிகவிரிவாகவும் தெளிவாகவும் பேசினார்கள். "ஞான சூரியன்" என்னும் புஸ்தகமும் வைக்கம் வீரர் உயர் திரு. ஈ. வெ. ராமசாமியவர்களுடைய திருவுருவப்படமும் வாங்கி வைக்கவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. திருவாளர்கள். ம. சொ. திருவெங்கிடராமானுஜம், சு. ந. போடி, தி. திம்மா ரெட்டியார் பு. ரெ. அ. ராமசாமி, நா. தி. ரெங்கப்ப ரெட்டியார், வா. ராமசாமி. கா. முகம்மது இப்ராகிம், பு. ரெ. பா. ரங்கசாமி, க, நா. தி. சின்னச்சாமி ரெட்டியார் சங்கத்திற்கு நன்கொடையளித்தார்கள். கூட்டம் இரவு சுமார் 11-30 மணிக்கு இனிது கலைந்தது. ஒரு நிருபர்.

## முசிரிதாலூகா போர்டு தலைவருக்கு விருந்து.

முசிரி தாலூகா போர்டு தலைமைப் பதவிக்கு முருகூர் பெரு நிலக்கிழவர் உயர் திருவாளர் ஆர். எம். எ. ஆர். இராமசாமி பிள்ளை அவர்கள் போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு துறையூர் பிரபல ஜவுளிவர்த்தகர் எ. பி. குருமூர்த்தி செட்டியார் அவர்களால் இன்றுமாலை ஜெமீன்தார் அவர்கள் சத்திரத்தில் சிற்றுண்டு விருந்து நடத்தப்பட்டது. திரு பிள்ளையவர்கள் உபசாரத்திற்கு பதிலளிக்கையில் துறையூருக்கு கல்விவிஷயத்திலும் ஜலவசதிவிஷயத்திலும் தம்மாலியன்ற உதவிகள் செய்வதாக வாக்களித்தது பாராட்டத்தக்கது.

ஒரு நிருபர்.


## உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டு.

1928 & I. P. No. 15.
1928 & E. A. No. 367.

மனுவாதி.— கருப்பகவுண்டன்.

எதிர்மனுவாதிகள்.— 1, 2, 9, 10, 12 திரு வேங்கிடஞ் செட்டி, வேலப்ப கவுண்டன், லட்சுமியம்மாள், பழனிக் கவுண்டன், பொங்கியா கவுண்டன்.

மேற்படி நெம்பரில் மனுவாதி தன்னை இன்சால்வெண்டு என்று Adjudge செய்ய வேணுமாயும் Protection Order கிடைக்க வேணுமாயும் மனுக்கள் செய்துகொண்டிருக்கிறார். மேற்படி மனுக்கள் 6—10—28-உ விசாரணைக்குப் போடப்பட்டிருக்கிறது அன்றையதினம் மேற்படி எதிர்மனுவாதிகள் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் ஒரு கட்சியாகப் பைசல் செய்யப்படும்.

Udamalpet, 21—9—28 } S Krishnayya, Pleader for Petitioner

## உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டு.

1928 & I. P. No. 16
1298 & E. A. No. 368

மனுவாதி:— மசையாக்கவுண்டன்

எதிர்மனுவாதிகள்.— 3, 5, 9, 10, 11, 13, பட்டிலிங்க கவுண்டன், சிரங்கசெட்டியார், லச்சுமம்மாள், பழனிக்கவுண்டன், ராமக்காள், பொங்கியாக்கவுண்டன்,

மேற்படி நெம்பரில் மனுவாதி தன்னை இன்சால்மெண்டு என்று Adjudge செய்ய வேணுமாயும் Protection Order கிடைக்க வேணுமாயும் மனுக்கள்செய்து கொண்டிருக்கிறார் மேற்படி மனுக்கள் 6-10-28 தேதி விசாரணைக்கு போடப்பட்டிருக்கிறது அன்றையதினம் மேற்படி எதிர்மனுவாதிகள் ஆஜராகி தங்கள் ஆக்ஷேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் இல்லாவிட்டால் ஒரு கக்ஷியாக பைசல் செய்யப்படும்.

Udamalpet, 21—9—28 } S Krishnayyar, Pleader for Petitioner

## 'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் ஒரு வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி


இதன் வருட சந்தா ரூ 3—0—0

வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,

விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

## எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை டேபிள் டைம்பீஸ் இனாம்!!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "ஜோல்டன்" கைக் கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக் கூடிய ஒரு அழகான டேபிள் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜினான் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

## கணித சோதிடம்.


பரகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதிஅனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதிஅனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப்புருஷனும் புருஷனுக்குப்பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீகசோதிட நூற்களும்பலவுள்ளதால் நாங்கள் எழுதிஅனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவதுதெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,

முதலியார்பேட்டை, புதுச்சேரி.

## எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்ரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு.

ஜினான் வாட்சு கம்பெனி


மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.




இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க் பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன?
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன. உண்மையாண கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணோ பெண்ணோ என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான இதுபோன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

## வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி. டி. மதராஸ்.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

முன்னோர்கள் போன்று செய்யாதீர்களென்றே சொல்லுகிறோம். இதைப்பற்றி தாகூர் சொன்ன சிறு வாக்கியத்தையும் கீழே எடுத்துக் காட்டுகிறேன்.


"புராதன இந்துதேசத்தில் பிராமணன் தனது ஸ்தானத்தை முன் ஜாக்கிரதையாலே கெட்டிப் படுத்திக் கொண்டான். புறத்தை ஒடுக்கு முன்பு ஜனங்களின் அறிவை ஒடுக்கி விட்டான். அறிவின் வேர்களை மற்றவர்களிடமிருந்து பறித்து விட்டமையால் இவர்கள் சுவதந்திர காரியம் செய்ய சாத்தியப்படவில்லை. பிறகு சூத்திரனென்பவனுடைய தலை பிராமணனுடைய பாத தூளியிலே ஈடுபட்டிருப்பதை ஸாவதானமாகக் காக்க வேறு சிரமம் வேண்டியதில்லை. பிர்ம ஞானமும் விரிந்த வாழ்வும் சூத்திரனுக்குக் கிடையாதென்று முன்பு பிராமணர் விதி போட்டதுபோல் நம்முடைய பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் விடுதலைக்கு வழிகாட்டும் அறிவுக்கதவைமுற்றிலு மடைத்துவிடவில்லை. சுகத்தை உத்தேசித்து தர்மத்தைக் கைவிடுதல் ஆத்ம அத்திக்கு வழியென்பதை பார்ப்பான் மறந்து விட்டான்" இது "குடிஅரசி"லிருந்தடித்து டாக்கூர் சொன்னதல்லவே,

சமஸ்கிருதம் எல்லாரும் படித்து அதிலுள்ள இலக்கணங்களும் படித்துவிட்டால் சாஸ்திரத்திலுள்ள புரட்டுகளெல்லாம் வெளிப்பட்டு விடுமே என்கிற பயம் பார்ப்பாருக்கு வேண்டியதில்லை. எல்லா சாஸ்திரங்களும் எல்லா பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டே வருகின்றன, யார் செய்த தவப்பயனோ பிரிட்டிஷ் ஜாதி இங்கே டீக்கிருக்கிறது? அவர்கள் காட்டும் நாகரீகத்திற்கு உங்கள் ஆசை செல்லாமலிருக்காது. அதனால் உங்கள் தரும சாஸ்திரமும் உங்கள் ஆசாரமும் கட்டுப்பாடும் அங்குவெளியாகித்தானே தீரவேண்டும். ஒவ்வொரு காலத்திலும் மனுஷ்யஜாதி கற்றுக்கொள்ளும் பெரிய உண்மையாகிய அறிவை உலகத்து நாடுகள் அனைத்திலும் தடுக்கவில்லை. நம்நாட்டின் ஒருபாஷையிலுள்ள இலக்கணத்தைக் கற்றுக்கொடுப்பதற்குத்தடைசொல்லுகிறீர்கள். நீங்கள் இப்பொழுது அடைந்துவரும் இங்கிலீஷ் நாகரீக சுகபோகங்களை அனுபவிப்பது இங்கிலீஸ் படிப்பாலல்லவா? அந்தப்படிப்பிற்காக எத்தனை மற்ற ஜாதிக்காரர்களின் தலைவாசலில் உங்கள் முன்னவர்கள் காத்திருப்பார்கள்? அந்தவிஸ்வாசத்தை சிறிது எண்ணிப் பாருங்கள். சாமியைப்பற்றின கதைகளும் சாஸ்திரங்களின் புரட்டுகளும் 'குடிஅரசு' சொல்லவேண்டியதில்லை: பார்ப்பானுடைய நடையே இப்பொழுது காட்டுகிறது.

---

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

**இனும்! இனும்!!**



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனும்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற டாக்டர் எஸ். பி மருந்துகள்.

## [ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும். ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றாடம் கிரமமாய் மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரப் கேட்லாக் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்த உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. வி. பி. வேறு.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனுபஜார், மதராஸ்,

**64 — பக்கம் — 64**

## ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளி வரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆனந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட 1...0...0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

**மாதிரி காபி இனும்.**

**ஆனந்த விகடன் ஆபீஸ்,**
**244. தங்கசாலை வீதி, மதராஸ்.**

தந்தி விலாசம்:—"விகடன்", டெலிபோன் நெ. 3311.

### பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்


மதுரை:—விபவ வருஷம் ஆவணி திங்கள் 14-உ மதுரை டவுன் 10.வது வார்டு பொன்னகரம் 1: செம்பர் சத்தில் செல்வச் சிரஞ்சீவி எம். என். சுப்புராயலு நாயுடு அவர்களுக்கும், சௌபாக்கியவதி ஆவுடையம்மாளுக்கும் பார்ப்பனரல்லாதாரைக்கொண்டு வெகு விமரிசையாய் திருமணம் நடத்தப்பெற்றது.

சுயமரியாதைத் தொண்டர்

ரோஜா முத்தையா

கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு 3½x 2½ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

---

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

---

## சேலம் ஜவுளிகள்.

வேஷ்டிகள்.

அசல் 80-ம் நெ. நூல் வேஷ்டிகள். பல வர்ணங்களில் நேர்த்தியான பார்டர் போட்டது கால் அங்குல அரை அங்குல பட்டுகரைகளில் அசல் வெள்ளி ஜரிகையினால் கொடி, இலை, பூ, காய்கள் சித்திரிக்கப்பட்டு உடுத்திக்கொள்ளுவதற்கு நாகரீகமாயிருக்கும். நீடித்து தாங்கக்கூடியது. 50 அங்குல அகலத்தில்எந்த நீளத்திலும் முழம் 1-க்கு ரூ. 1-12-0, 2-0-0, 2-8-0, 3-0-0.

நேரே உற்பத்தி செய்யுமிடம் இது ஒன்றே. புதுமாதிரி தினுசுகள் மிகவும்குறைந்தவிலைக்கு உத்திரவாதத்துடன் உங்கள் வீட்டுக்கே சேர்ப்பிக்கிறோம். தபால் செலவு இனாம். உடனே எழுதுங்கள்.

சேலைகள்.

நேர்த்தியான ஜரிகைபார்டர் போட்ட பல வர்ண அசல் 60 நெ. நூல் சேலைகள். தினந்தோறும்துவைத்துக் கட்டலாம். சாயத்திற்கு உத்திரவாதம். கனம் இல்லாத நூல் புடவை இதுஒன்றுதான். 42 அங்குல அகலம் 7 கஜ நீளம் விலை ரூ. 14—0—0.

சேலம் ஷண்முகம் கம்பெனி லிமிடெட்.
மெயின் ரோட், சேலம். (தெ. இந்தியா.)

---

## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.

இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலைப்பட்டி ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

---

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.


தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

---

## மூந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை சர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த கிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலாக சேப்டி பின்கள் 2½ ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி

தபால் பெட்டி 119, மதராஸ்.

---

## அறிவிப்பு.

"குடி அரசு" வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்.

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

---

'ரிவோல்ட்' 'ரிவோல்ட்'

## 'REVOLT'

—)o(—

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.
ஆசிரியர். "குடி அரசு" & "ரிவோல்ட்,"
ஈரோடு.

# ஹிப்னாடிசம், மெஸ்மெரிஸம்.

முதலிய அரிய அற்புதங்களைக் கற்கவேண்டுமானால்,
சுயமரியாதை பெற வேண்டுமானால்,

# ஜீவ வசிய பரம ரஹஸ்யம்



என்னும் மனோ வசிய ஜீவ வசிய நூலைப் படித்து
பயனடையுங்கள்.

## இதிலடங்கிய விஷயங்கள்:—

I முதற் பாகம் :—(11 பாடங்கள்)

முன்னுரை.

1 மானிட வசியம்
2 தன்னம்பிக்கைப் பற்றி
3 தன்னாட்சி
4 இருவகை மனம்
5 சுய மந்திரம்
6 மஹா ரகசியம்
7 பிராணாயாமம் (படங்களுடன்.)
8. விசாசுலமும், வீண்நினைவும்
9 அயர்ந்த நித்திரை
10 மன வோர்மை
11 முக்கிய குறிப்பு

II இரண்டாம் பாகம் :—(7-பாடங்கள்.)

1 தெலிபதி or மானஸ தந்தி
2 மானஸ தந்தியின் முதல் அப்பியாசம்
3 மானஸ தந்தியின் இரண்டாவது அப்பியாசம்
4 மானஸ தந்தியின் மூன்றாவது அப்பியாசம்
5 மானஸ தந்தியின் நான்காவது அப்பியாசம்
6 மானஸ தந்தியின் ஐந்தாவது அப்பியாசம்
7 பொதுக் குறிப்பு

III மூன்றாம் பாகம் :—(12-பாடங்கள்.)

1 கோரிய பெண்ணை மணமுடிப்பது
2 மணமகன், மணமகளுடைய காதல் விருத்தி
3 ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெறுதல்
4 ஸ்திரீ புருஷனுடைய ஊடலை ஒழித்தல்
5 நண்பரின் இழந்த நேசத்தைப் பெறுதல்
6 பணிமற்ற குழந்தையைப் பக்குவப் படுத்தல்
7 கல்யாணத்திற்கு ஏற்பாடான மணப்பெண்ணின் காதலைப் பெற
8 மனமில்லா மணத்தை மகிழ்வு பெறச் செய்தல்
9 உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல்
10 மேலதிகாரியின் விருப்பத்தைப் பெறுதல்
11 உலகத்தில் முதன்மைபெற
12 நட்பை உறுதிப்படுத்தல்

### அனுபந்தம்—1

மானிட வசிய ரஹஸ்யம்.

மானிட வசிய ரஹஸ்யத்தின் பீடிகை

மானிட வசியம், தன்னடக்கம் வியாதிகளை விலக்கிக் கொள்ளல் அப்பியாசம், மந்திரம்

### அனுபந்தம்—2

அற்புதானந்த ரஹஸ்யம்
அல்லது
சில அபூர்வ மர்மங்கள்

பிராணாயாமத்தால் வசீகர வசியம் பெறுவதெப்படி?

இரகசிய முறையால் எளிதில் அரிய பொருள் சம்பாதிப்பதெப்படி?

ஒரு சாதாரண யோக சாதனையால் எல்லா விருப்பங்களையும் பெற்றுக்கொள்வதெப்படி?

எப்படிப்பட்டவர் கூட்டத்திலும் இணையில்லாக் கண்ணியம் பெறுவதெப்படி?

நட்சத்திர உதவியால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெற்று எல்லாவித இடையூறுகளையும் தாண்டிக்கொண்டு அப்பாற் சென்று அளவிறந்த வெற்றி பெறுவதெப்படி?

முதிர்ந்த வயதிலும் வாலிபதசையை வளர்ப்பதெப்படி?

கண் பார்வையையும், சுரு ரோமத்தையும், வெண் தந்தங்களையும் காப்பாற்றிக் கொள்வதெப்படி?

பிராணாயாமம் முதலியவற்றால் பூரணச் சுகத்தை நிலைப்படுத்திக் கொள்வதெப்படி?

இருவித ஆன்மப் பயிற்சியால் எல்லா நோய்களையும் கண்டிப்பதெப்படி?

பிளேக், விஷ ஜுரம் ஆகியவற்றைத் தடுத்துக் கொள்வதெப்படி?

வைசூரியும், வாந்தி பேதியும் வாரமல் தடுப்பதெப்படி?

மரணம் வருமுன் அதை அறிந்து கொள்வதெப்படி?

மரண காலத்தில் செய்யப்படும் ஒருவகைக் கிரியையால் மரணத்துக்குப் பின் மகா மேலான உன்னத ஸ்தானத்தைத் பெறுவதெப்படி?

சாதாரணப் பிராணாயாமத்தால் உங்களுடைய பகைவரை நண்பராகச் செய்து கொள்வதெப்படி?

மனோ சக்தியை அளவுக்கு மிஞ்சி அபி விருத்தி செய்து கொள்வதெப்படி?

ஜியூஜிட்ஸு முறைப்படி மரித்தோரை எழுப்புவதெப்படி?

நாகப் பாம்பின் விஷத்தைப் போக்குவதெப்படி?

வில்வ வேரின் விநோதங்களென்ன?

புளியேப்பத்தைத் தடுப்பதெப்படி?

துளசியின் மகிமை என்ன?

நாயுருவியின் அதிசயம் யாது?

லவணத்தின் மகிமை என்ன?

இத்துடன் பல விநோத விடுகதைப் படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

மேல் நாட்டில் 12 பவுன் (ரூ. 80) விலை மதிப்பிடக் கூடிய இப் புத்தகத்தை நம் ஏழை நாடாகிய இத்தமிழ் நாட்டின் கண் விலை ரூ. 3-க்கே விற்க துணிகின்றோம்.

புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு மூன்று ரூபாய் மதிப்பிடுவார்கள். என்பது நிச்சயம்.

உடனே உங்களுக்கோர் ஐசுவரியம் போன்ற இப்புத்தகத்தை வரவழையுங்கள்.

**இதன் விலை ரூ. 3—0—0, தான் வி.பி. வேறு.**

எல்லா புத்தக ஷாப்பிலும்
கிடைக்கும்

ஒரே முறையில் ½ பிரதி வாங்குவோர்க்கு
தபால் சார்ஜ் இனாம்

**மனோஹரம் கம்பெனி, தபால்பெட்டி 248, சென்னை.**


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.